بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

இதழ் 4-5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

27 ஜமாதியுல் அவ்வல் 04 ஜமாதியுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 23-30 ஃபதஹ்
1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி 23-30 ஜனவரி 2020

**அல்லாஹ்வின் கட்டளை**

اَفَمَنِ اتَّبَعَ رِضْوَانَ اللّٰهِ
كَمَنْۢ بَآءَ بِسَخَطٍ مِّنَ اللّٰهِ
وَ مَاْوٰىهُ جَهَنَّمُ ؕ
وَ بِئْسَ الْمَصِيْرُ

அல்லாஹ்வின் விருப்பத்தினைப் பின்பற்றிச் செல்பவன் அல்லாஹ்வின் கோபத்தைப் பெற்றுத் திரும்புகின்றவனைப் போன்று ஆவானா? இவன் தங்குமிடம் நரகம் ஆகும். அது தங்குமிடங்களில் மிகக் கெட்டது. (3:163)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## ஆற்றல்களை பயன்பாட்டில் கொண்டுவராமல், இயற்கை சட்ட விதிகளை பயன்பாட்டில் கொண்டுவராமல் இருப்பது என்பது ஒரு ஒழுக்கமின்மை மற்றும் அவமரியாதையாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### துஆ செய்வதற்கு முன் அனைத்து ஆற்றல்களையும் செலவு செய்வது அவசியமாகும்

இய்யாக நஸ்தயீனு என்பதற்கு முன்னால் இய்யாக நஃபுது கூறப்பட்டிருப்பது,மனிதன் துஆவின் போது அனைத்து ஆற்றல்களை பயன்படுத்தி இறைவன் பக்கம் வருகிறான் என்பதால் ஆகும். ஆற்றல்களை பயன்பாட்டில் கொண்டுவராமல், இயற்கை சட்ட விதிகளை பயன்பாட்டில் கொண்டுவராமல் இருப்பது என்பது ஒரு ஒழுக்கமின்மை மற்றும் அவமரியாதையாகும். உதாரணமாக, விவசாயி விதையை விதைப்பதற்கு முன்பே , இறைவா ! இந்த நிலத்தை பசுமையானதாக்குவாயாக, பூ ,பழம் தருபவையாக ஆக்குவாயாக, இவ்வாறு துஆ செய்கிறார் எனில் இது கேலி கிண்டல் ஆகும்.

இதைத்தான் இறைவனை சோதிப்பது, ஆய்வுக்குட்படுத்துவது என்பார்கள்.இது தடுக்கப்பட்டுள்ளது மேலும் இறைவனை சோதிக்காதீர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு எனில், மஸீஹ் (அலை) அவர்கள் உணவு வேண்டிய சம்பவத்தில் இந்த விசயம் மிகத்தெளிவாக கூறப்பட்டு இருக்கிறது, இதனை ஆழ்ந்து யோசியுங்கள் மற்றும் சிந்தியுங்கள்.

எந்த மனிதர் செயல்களை பயன்படுத்துவது இல்லையோ அவர் துஆவும் செய்வதில்லை மாறாக இறைவனை சோதிக்கிறார், இது உண்மையான விசயமாகும். எனவே துஆ செய்வதற்கு முன்னர் தனது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவது அவசியமாகும், மேலும் இதே அர்த்தம் தான், இந்த துஆவுக்கும் உள்ளது. முதலில், மனிதன் தனது செயல்களின் உறுதி மீது பார்வையை செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் சீர்திருத்தத்தை காரணி பொருட்கள் ரீதியில் அமைப்பது இறைவனின் நடைமுறையாகும். அவன் ஏதேனும் ஒரு பொருளை உருவாக்குகிறான் அது சீர்த்திருத்தத்திற்கு காரணமாக அமைகிறது. துஆ செய்தால் பிறகு காரணியின் அவசியம் என்ன இருக்கிறது எனக்கூறுகின்ற அந்த மக்கள் இந்த இடத்தில் சற்று கவனமாக சிந்திக்கவேண்டும்.

துஆ ஒரு மறைமுக காரணியாகும். அது மற்ற காரணிகளை உருவாக்கிவிடுகிறது என்று எண்ணுபர்கள் அறியாதவர்கள் ஆவர் மேலும் துஆவின் சொற்களான இய்யாக நஃபுது என்பதின் மீது இய்யாக நஸ்தயீனை நிறுத்தி இந்த செயலுக்கு வேறு விளக்கத்தை செய்கிறார். ஆகச்சுருக்கம், அவன் காரணிகளை உருவக்கி விடுகிறான். இறைவனின் நடைமுறை இவ்வாறு இருந்துவருவதையே நாம் பார்த்து வருகிறோம். தாகத்தை தணிப்பதற்கு தண்ணீர், பசியை போக்க உணவின் எற்பாட்டை செய்து இருப்பதை பாருங்கள் ஆனால் காரணிகளின் மூலம். எனவே இந்த காரணி பொருட்களின் தொடர் இவ்வாறே செல்கிறது மேலும் பொருட்களின் படைப்பு அவசியமாகும்.

ஏனெனில் இறைவனுக்கு இந்த இரண்டு பெயர்களே உள்ளன. மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் கூறியது போன்று கானல்லாஹு அஸீஸன் ஹகீமா ( அன்நிஸா: 159) அஸீஸ் என்பது ஒவ்வொரு வேலையை செய்துவிடுவது மேலும் ஹகீம் என்பது ஒவ்வொரு வேலையை ஏதேனும் ஞானத்துடன் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப சிறப்பாக செய்துவிடுவது என்பதாகும்.

தாவரங்கள், கனிமங்களில் விதவிதமான சிறப்புகள் வைக்கப்பட்டுள்ளதை பாருங்கள்.துர்புத் ( ஒரு செடி) தை பாருங்கள் அது ஓரிரு கிராமத்திற்கே வயிற்றுப்போக்கை ஏற்படுத்தி விடுகிறது.சக்மூனியாவும் இதை போன்றதே ஆகும். வெறுமெனே வயிற்றுப் போக்கை கொண்டுவர,அல்லது தண்ணீர் இன்றி தாகம் தணிக்க அல்லாஹ் ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான். ஆயினும் இயற்கையின் வினோதங்களின் அறிவை பெறுவதும் அவசியமாகும்.

ஏனேனில் எந்தளவுக்கு அறிதல் மற்றும் இயற்கை வினோதங்களின் அறிவு விரிவடைந்து கொண்டே செல்லுமோ அதே அளவு மனிதன் இறைவனின் பண்புகளை அறிந்து அவன் அருகாமையை பெறும் தகுதியை அடைகிறான். மருந்தியல் மற்றும் வானவியலில் இருந்து ஆயிரகணக்கான தன்மைகள் வெளிப்பட்டு வருகிறது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1 பக்கம் 106 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த பயணத்திலிருந்து மதீனாவிற்கு திரும்பி வந்தாலும் முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று இரண்டு ரக்அத்துகளை தொழுவார்கள்**

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற சஹாபாக்களான ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா வாகிஃபி (ரலி), ஹஸ்ரத் முரார்ா பின் ரபீஹ் (ரலி), ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**வாளால் போர் செய்வதன் தொடக்கம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகள் தொடர்பான குறிப்பு**

**நிராகரிப்பாளர்களின் தீங்குகளிலிருந்து முஸ்லிம்களை பாதுகாப்பாக வைப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட நான்கு திட்டங்கள்**

**Daily alfazal online பத்திரிகை webite ல் ஆரம்பிக்கப்பட்டதற்கான அறிவிப்பு மற்றும் அதைப் பற்றிய அறிமுகம்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 டிசம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் ஹிலால் பின் ரபிய்யா பற்றி கூறி வந்தேன். அதில் தபூக் போர் பற்றி கூறப்பட்டது. ஹஸ்ரத் ஹிலால் பின்தங்கியவர்களில் ஒருவராக இருந்தார்கள். அவர் போரில் பங்கு பெறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்தபோது அவர்களின் மீது கோபத்தை வெளிப்படுத்தினார்கள். சிறிய தண்டனையும் கொடுத்தார்கள். இதனால் அந்த மூவரும் மிகவும் நிம்மதியிழந்தனர். இறைவன் முன் குனிந்தவாறு இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா செய்தனர். எந்த அளவுக்கு என்றால், அந்த மூவரில் ஹஸ்ரத் ஹிலாலும் அடங்கியிருந்தார். அவர்களுடைய மன்றாட்டம் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர்களின் மன்னிப்பு குறித்து அல்லாஹ் வசனத்தை இறக்கினான்.

இது குறித்து மேலும் இந்த போருக்கான ஆயத்தங்களை சஹாபாக்கள் செய்தபோது அது எத்தகைய தியாகமாக இருந்தது என்றும் கூறப்பட்டது. மேலும் நயவஞ்சகத்தை உள்ளத்தில் கொண்ட மக்கள் இதில் கலந்து கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து பொய்யான காரணங்களை எடுத்து வைத்தனர். சிலர் ஆரம்பத்திலேயே செல்ல மறுத்து விட்டனர். அன்னார் இந்த நயவஞ்சகர்களின் விவகாரங்களை இறைவனிடம் விட்டு விட்டார்கள். இதனைத் தொடர்ந்து சில விஷயங்கள் கூறவேண்டியதுள்ளன. அவற்றை இப்போது கூறுவேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செல்வதற்கு முக்கியத்துவம் தந்தவர்களுள் ஒருவர் ஜத் பின் கைஸ் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் ரோமானியர்களுடன் யுத்தம் செய்ய எங்களுடன் வரமாட்டீரா? என்று அவர்களிடம் கூறினார்கள். அவர் உடனே ஒரு சாக்குப்போக்கை எடுத்து வைத்தார். பெண்களால் எனக்கு பெரும் பிரச்சனை வரும். எனக்கு சில பொறுப்புகள் இருக்கின்றன. எனவே என்னை சோதனையில் ஆழ்த்திவிட வேண்டாம் என்று கூறினார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை விட்டு விட்டார்கள். அனுமதி வழங்கினார்கள். உடனே அல்லாஹ் ஒரு வசனத்தை இறக்கினான்.

وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ ائْذَنْ لِّيْ وَلَا تَفْتِنِّيْ ۗ أَلَا فِي الْفِتْنَةِ سَقَطُوْا ۗ

وَإِنَّ جَهَنَّمَ لَمُحِيْطَةٌ بِالْكٰفِرِيْنَ

அவர்களில் ஒரு சிலர் கூறுகிறார்: எங்களுக்கு அனுமதி வழங்குங்கள். எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட வேண்டாம். எச்சரிக்கை அவர்கள் குழப்பத்தில் விழுந்து விட்டனர். நிச்சயமாக நரகம் இந்த மறுப்பவர்களைச் சூழக்கூடியதாக உள்ளது. (9:49)

மதீனாவின் ஒரு யூதரின் பெயர் ஸயீலம் ஆகும். மதீனாவின் ஜாசும் பகுதியில் வசித்து வந்தார். அந்த இடத்திற்கு பேரே ஸூம் என்றும் கூறப்படும். மதீனாவிலிருந்து சிரியா செல்லும் வழியில் அபூஹிஸம் பின் தய்யிஹான் உடைய கிணறு இருந்தது. அதன் தண்ணீர் நன்றாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதில் தண்ணீர் அருந்துவதை விரும்பினார்கள். அந்த யூதரின் வீடு நயவஞ்சகர் கூடும் இடமாக இருந்தது. தபூக் போருக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் செல்வதை அவர்களே தடுக்கின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிரை அழைத்து அவர்களிடம் போய் அது குறித்து அவர்கள் யார் என்று விசாரிக்குமாறு கூறினார்கள். அவர்கள் மறுத்தால் நீங்கள் அவர்களிடம் உங்களைப் பற்றி இவ்வாறு செய்தி வந்தது என்று கூறுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்மார் அங்கு சென்று சேர்ந்ததும் அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து மன்னிப்பு கேட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 597 கஸ்வா தபூக் – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஹஸமில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 186 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 1 பக்கம் 390 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதனையே அல்லாஹ் இவ்வாறு கூறினான்:

يَحْذَرُ الْمُنٰفِقُوْنَ أَنْ تُنَزَّلَ عَلَيْهِمْ سُوْرَةٌ تُنَبِّئُهُمْ

بِمَا فِيْ قُلُوْبِهِمْ ۗ قُلِ اسْتَهْزِءُوْا ۚ إِنَّ اللّٰهَ مُخْرِجٌ مَّا تَحْذَرُوْنَ

وَلَئِنْ سَأَلْتَهُمْ لَيَقُوْلُنَّ إِنَّمَا كُنَّا نَخُوْضُ وَنَلْعَبُ ۗ

قُلْ أَبِاللّٰهِ وَاٰيٰتِهٖ وَرَسُوْلِهٖ كُنْتُمْ تَسْتَهْزِءُوْنَ

لَا تَعْتَذِرُوْا قَدْ كَفَرْتُمْ بَعْدَ إِيْمَانِكُمْ ۗ إِنْ نَّعْفُ

عَنْ طَآئِفَةٍ مِّنْكُمْ نُعَذِّبْ طَآئِفَةً بِأَنَّهُمْ كَانُوْا مُجْرِمِيْنَ

நயவஞ்சகர்கள் தமக்கு எதிராக ஓர் அத்தியாயம் இறங்கி விடக் கூடாதே; அது அவர்களின் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தி விடக்கூடாதே என்று அஞ்சுகின்றனர். நீர் கூறுவீராக. நீங்கள் ஏளனம் செய்து கொண்டே இருங்கள். அதாவது அவர்களின் பயம் கூட ஏளனம் செய்யும் விதமாகவே இருந்தது.

நிச்சயமாக அல்லாஹ் உங்கள் பயத்தைப் போன்றே வெளிப்படுத்திக் காட்டுவான். நீங்கள் அவர்களிடம் கேட்டால் கண்டிப்பாக நாங்கள்

அமைதியாகவும், விளையாட்டாகவும் கூறினோம் என்பர். நீர் கேளும். அல்லாஹ், அவனது அடையாளங்கள் மற்றும் ரஸூலிடம் நீங்கள் எள்ளி நகையாடுகிறீர்களா? எந்த சமாளிப்பும் வேண்டாம். நீங்கள் ஈமான் கொண்ட பிறகு மறுத்து விட்டீர்கள். உங்களில் ஒரு கூட்டத்திற்கு மன்னிப்பும் இன்னொரு கூட்டத்திற்கு தண்டனையும் தர முடியும். நிச்சயமாக அவர்கள் குற்றவாளிகளாவர். (9:64–66)

எவ்வாறிருப்பினும் இதுவே அவர்களின் நிலையாகும். அவர்களில் சிலர் முதலிலேயே செல்லாமல் இருக்க திட்டம் தயாரித்தனர். நயவஞ்சகர் அதில் அடங்கியிருந்தனர். அவர்கள் இவர்களை அழைத்தனர். சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிய பிறகு சாக்குப்போக்குகளை தயாரித்துக் கூறினர். அன்னார் அவர்களின் விவகாரங்களை அல்லாஹ்விடம் விட்டுவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி மதீனாவுக்கு அருகில் வந்ததும் கூறினார்கள். மதீனாவில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பயணத்திலும் ஒவ்வொரு பள்ளத்திலும் உங்களுடன் இருந்தார்கள். உடனே சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்கள் மதீனாவில் இருக்கிறார்கள் எனில் எங்களுடன் இருப்பவர்களாக எவ்வாறு ஆவார்கள்? அவர்கள் மதீனாவில் இருந்தாலும் ஏதோ ஒரு காரணம் அல்லது நோய் அவர்களைத் தடுத்து விட்டது. அவர்கள் கூறுகிற காரணம் அனுமதிக்கப்பட்டது. அவர்களுக்கு உங்களுடன் வர விருப்பம் இருந்தும் நோய் அல்லது ஒரு காரணம் வரவிடாமல் தடுத்து விட்டது. இருந்தபோதிலும் அவர்களையும் உங்களைச் சேர்ந்தவர்களாகவே ஆக்கியுள்ளான்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 263 முஸ்னத் அனஸ் பின் மாலிக் (ரலி) ஹதீஸ் எண் 12030 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 132 முஸ்னத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) ஹதீஸ் எண் 14731 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தபூக்கிலிருந்து திரும்பும்போது ஓரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் விரைவாக செல்கிறேன். உங்களில் யாருக்கு என்னுடன் விரைவாக வர முடியுமோ வாருங்கள். எவர் விரும்புகிறாரோ அவர் மெதுவாக வரட்டும்.

பிறகு அறிவிப்பாளர் கூறுகிறார்: நாங்கள் புறப்பட்டோம். எந்த அளவுக்கு எனில் எங்களுக்கு மதீனா கண்களில் பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது தாபா ஆகும். இது நலம் தருவது. இது உஹது மலை. இது நம்மீது அன்பு செலுத்துகிறது. நாமும் அதன் மீது அன்பு செலுத்துகிறோம்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்சாரிகளின் வீடுகளுள் மிகச் சிறந்த வீடு பனூ நஜ்ஜார்களின் வீடுகள். பிறகு பனூ அப்தே அஷ்அர் உடைய வீடுகள். பிறகு பனூ அப்தே ஹாரிஸ் பின் கஸ்ரஜ் வீடுகள். பிறகு பனூ சாயிதாக்களின் வீடுகள் என்றார்கள். இவ்வாறு அன்னார் அன்ஸார் அனைவரின் வீட்டையும் சிறந்ததாக ஆக்கினார்கள். சஅத் பின் உபாதா எங்களுடன் வந்து இணைந்து கொண்டார். ராவி கூறுகிறார். அவர் எங்களுடன் வந்து இணைந்து கொண்டார்.

அபூ உஸைது கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் வீடுகளின் மேன்மையை எடுத்துக் கூறினார்களே! உமக்குத் தெரியுமா? நம்மை கடைசியில் வைத்துள்ளார்கள் என்றார். ஹஸ்ரத் சஅத், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் அன்ஸாரிகளின் வீடுகளின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளீர்கள். எங்களை கடைசியில் வைத்துள்ளீர்கள் என்றார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், நீர் நல்லவர்களுடன் இருப்பது உமக்கு போதுமானதில்லையா? என்று கேட்டார்கள். சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை வழிகொண்டழைக்க மதீனாவின் ஆண்களும் பெண்களும் வயோதிகர்கள், சிறுவர்கள் அனைவரும் மதீனாவுக்கு வெளியில் சனீஅத்துல் விதாவுக்கு அருகில் வந்தார்கள். இது மதீனாவுக்கு அருகிலுள்ள ஓரிடம் ஆகும். மதீனாவிலிருந்து மக்கா செல்பவர்களை இந்த இடம் வரை வந்து வழி அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. எனவே இதனை சனீ அத்துல் விதா என்று கூறப்பட்டது. வரலாற்றாசிரியர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து குபா வழியாக மதீனா வந்தபோது மதீனாவின் இப்பக்கத்திலும் கூட சன்னயத்துல் விதா நடந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய அறிவிப்பில் வருகிறது. மதீனாவின் குழந்தைகள் அவர்களை வழிகொண்டு அழைத்தார்கள். அப்போது அந்த குழந்தைகள் கூறினர்.

طَلَعَ الْبَدْرُ عَلَيْنَا مِنْ ثَنِيَّاتِ الْوَدَاع

وَجَبَ الشُّكْرُ عَلَيْنَا مَا دَعٰى لِلّٰهِ دَاع

அதாவது பதினான்காம் பக்க நிலவு நம்மிடம் உதித்து விட்டது. சனிஅத்துல் விதா பக்கம் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவது, அல்லாஹ்வைத் தவிர அழைப்பதற்கு வேறு யாரும் இல்லாத நாள் வரை நம்மீது கடமையாகிவிட்டது.

சில ஹதீஸ் விரிவுரையாளர்கள் புகாரியின் விரிவுரையாளர்களாகிய ஹஸ்ரத் அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானி போன்றவர் கூறுகிறார்கள். அவர்களின் கருத்தின்படி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறிய அந்தக் கவிதை வரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பும்போது கூறப்பட்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் சன்னியத்துல் விதா என்ற இடத்திலிருந்து மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்கொண்டு அழைத்தார்கள். ஏனெனில் சிரியாவிலிருந்து வருபவர்களை எதிர்கொண்டு அழைப்பது வேறு பக்கத்திலிருந்து செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு திரும்பி வருவது பற்றிய செய்தி கிடைத்ததும் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மதீனாவுக்கு வெளியில் வந்து வரவேற்றார்கள்.

ஹஸ்ரத் ஸாயித் பின் யசீத் கூறுகிறார்: நானும் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்பதற்காக சன்னியத்துல் விதாவுக்கு சென்றிருந்தேன். அன்னார் தபூக் போரிலிருந்து திரும்பி வரும்போது இமாம் பைஹகி அவர்களும் இதனை அறிவிக்கிறார்கள். குழந்தைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வழிமேல் நின்று வரவேற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வரும்போது எவ்வாறிருப்பினும் இருவகை அறிவிப்புகளும் காணப்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது வரவேற்றார்கள் என்றும் தபூக் போரிலிருந்து திரும்பும்போது வரவேற்றார்கள் என்றும் காணப்படுகிறது. சிலரது பார்வையில் அன்னார் மதீனாவுக்க ஹிஜ்ரத் செய்யும்போது இக்கவிதை பாடி வரவேற்றார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 100 சனிய்யத்துல் வதா, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 267)

சிலரது பார்வையில் தபூக் யுத்தத்தில் இருந்து திரும்பும்போது இக்கவிதை பாடி வரவேற்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கம் அன்னார் ஒரு பயணத்தில் இருந்து மதீனா திரும்பினால் முதலில் பள்ளிக்குச் சென்று 2 ரக்அத்துகள் தொழுது விட்டு வீடு செல்வார்கள். இதன்படியே தபூக்கிலிருந்து திரும்பியதும் அன்னார் மதீனாவில் சூரியன் உதித்த பிறகுள்ள நேரத்தில் நுழைந்தார்கள். முதலில் பள்ளிக்குச் சென்று 2 ரக்அத்துகள் தொழுதார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 414 முஸ்னத் கஅப் பின் மாலிக் (ரலி) ஹதீஸ் எண் 15865 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தொழுகைக்குப் பின் அன்னார் பள்ளியில் அமர்ந்தார்கள். மக்கள் சந்திக்க வந்தார்கள். அவர்களுடன் வேண்டுமென்றே பின்தங்கி விட்டவர்களும் வந்து சந்தித்தார்கள். எந்தக் காரணமுமின்றி வேண்டுமென்றே பின்தங்கியவர்கள் ஆவர். அவர்கள் அன்னாரிடம் வந்து ஒரு காரணத்தைக் கூறினர். அவ்வாறு கூறியவர்கள் ஏறத்தாழ 80 பேர் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் கூறிய காரணங்களின் உண்மை நிலையை அறிந்திருந்தபோதிலும் இவர்கள் தவறான காரணம் கூறுகின்றனர் என்று அறிந்திருந்தும் கூட அவர்களின் வெளிப்படையான விளக்கங்களை ஏற்றுக் கொண்டு

கண்டும் காணாமல் விட்டு விட்டார்கள். பைஅத் வாங்கினர். அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடினார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாபுல் மகாஸி, கஅப் பின் மாலிக் ஹதீஸ் எண் 4418)

இதுபற்றி முதலிலேயே விபரமாக கூறப்பட்டு விட்டது. ஹஸ்ரத் ஹிலால் பின் உமையய்யா, ஹஸ்ரத் மராரா பின் ரபி, ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் போன்றவர்கள் பொய்யான காரணங்கள் கூறவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கோபத்தை சில நாள்கள் சகித்து வந்தார்கள். மிகவும் அழுது மன்றாடினார்கள். தவ்பா செய்தவாறு இறைவன் முன் குனிந்தார்கள். பிறகு இறைவன் திருக்குர்ஆனில் இவர்களின் மன்னிப்பைக் குறித்து அறிவிப்பு செய்தான்.

அடுத்த சஹாபி ***முராரா பின் ரபி அம்ர்*** ஆவார். இவரது தந்தை ரபி பின் அதி ஆவார். இவரது தந்தை பெயர் அதி மற்றும் ரபி என்று கூறப்படுகிறது. ஹஸ்ரத் முராரா பின் ரபி அம்ரி அன்ஸார் உடைய அவ்ஸ் கோத்திரத்தின் பனூ அம்ர் பின் அவ்ஸ் குடும்பத்தைச் சார்ந்தவர். ஓர் அறிவிப்பின்படி இவரது குடும்பம் பனூ அவ்ஸ் உடைய ஒன்றுபட்ட கோத்திரமாகிய குஸாஆவைச் சார்ந்தது. குஸாஆவும் பிரபலமான கோத்திரமாகும். மதீனாவில் இருந்து 10 மைல் தொலைவில் வாதிவுல் குரா என்ற இடத்திற்கு அருகில் மாதாயின் சாலிஹ் உடைய மேற்கில் உள்ளது.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 129 முராரா பின் ரபீஹ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 6 பக்கம் 52 முராரா பின் ரபீஹ் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முராராவுக்கு பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருந்தது. இமாம் புகாரி இந்த சஹாபியை தமது சஹாபாக்களின் நிலைமைகளை விவரிக்கும் நூலில் இவரைப் பற்றி இவர் பத்ர் போரில் கலந்து கொண்டவர் என்று கூறுகிறார். ஹஸ்ரத் இப்னு ஹிஷாம் தமது பத்ர் போர் சஹாபிகளின் நூலில் இவரது பெயரை குறிப்பிடவில்லை. இவர் தபூக் போரில் கலந்து கொள்ள முடியாமல் போன மூன்று சஹாபிகளில் ஒருவராவார். அதன் விபரம் கூறப்பட்டது. அவர்களைப் பற்றி இறைவன் திருக்குர்ஆனில் வசனமும் அருளினான்.

وَّعَلَى الثَّلٰثَةِ الَّذِيْنَ خُلِّفُوْا ؕ حَتّٰۤى اِذَا ضَاقَتْ عَلَيْهِمُ الْاَرْضُ
بِمَا رَحُبَتْ وَضَاقَتْ عَلَيْهِمْ اَنْفُسُهُمْ وَظَنُّوْۤا اَنْ لَّا
مَلْجَاَ مِنَ اللّٰهِ اِلَّاۤ اِلَيْهِ ؕ ثُمَّ تَابَ عَلَيْهِمْ
لِيَتُوْبُوْا ؕ اِنَّ اللّٰهَ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

இந்த மூன்று பேரின் கழிவிரக்கத்தை ஏற்றுக் கொண்டவாறு அல்லாஹ் அவர்களிடம் திரும்பினான். அவர்களுக்கு பூமி விரிந்திருந்த போதிலும் மிகவும் குறுகி விட்டது. அவர்களின் உயிர்கள் நெருக்கடிக்கு உள்ளாகின. அவர்கள் அல்லாஹ்வை விட்டுவிட்டு வேறு எந்த அடைக்கலமும் இல்லை என்று புரிந்து கொண்டனர். அவர்கள் அவனிடம் திரும்பினர். அவர்கள் மேலும் தவ்பா செய்வதற்காக இறைவன் அவர்களிடம் திரும்பினான். நிச்சயமாக அல்லாஹ்வே தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாவான். (9:118)

இதுபற்றி முன்னர் கூறப்பட்டது. இந்த பின்தங்கிவிட்ட மூன்று சஹாபா ஹஸ்ரத் கஅப் பின் மாலிக், ஹஸ்ரத் முராரா பின் ரபி, ஹஸ்ரத் ஹலால் பின் உமைய்யா ஆகியோர் அன்ஸாரிகளைச் சேர்ந்தவர்களாவர்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி, கஅப் பின்மாலிக் ஹதீஸ் எண் 4418 & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 129 முராரா பின் ரபீஹ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அடிப்படையில் ஹஸ்ரத் முராராவைப் பற்றி தனியாக எதுவும் கூறப்படவில்லை. கஅப் பின் மாலிக் பற்றியே விரிவாக கூறப்பட்டுள்ளது. ஹிலால் பின் உமைய்யாவுடன் சேர்த்து கூறிவிட்டேன். இங்கு மீண்டும் கூற வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்த சஹாபி **உத்பா பின் கஸ்ஸான்**. இவரது சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் மற்றும் அபூ கஸ்வான் ஆகும். ஹஸ்ரத் உத்பா பனூ நவ்ஃபில் பின் அப்துும் மனாப் உடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஹஸ்ரத் உத்பாவின் தந்தையார் பெயர் கஸ்வான் பின் ஜாபிர் ஆகும். ஹஸ்ரத் உத்பாவின் சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் தவிர அபூ கஸ்வான் என்றும் கூறப்பட்டது. ஹஸ்ரத் உத்பா ஹர்தா பின் ஹாரிஸ் உடன் திருமணம் செய்தார். ஹஸ்ரத் உத்பா தாமே கூறுகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முதன்முதலாக இஸ்லாத்தை ஏற்றவர்களுள் ஒருவராவார்.

இப்னு அசிர் கூறுகிறார்: உத்பா அபிஸீனியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றபோது 40 வயதாக இருந்தார். இப்னு சாத் அறிவிப்பின்படி இவர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும்போதுதான் இவரது வயது 40 ஆக இருந்தது. எவ்வாறிருப்பினும் அபிஸீனியாவிலிருந்து மக்காவுக்கு திரும்பி வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மக்காவில் தான் இருந்தார்கள். உத்பா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மக்காவில் தங்கியிருந்தார். மிக்தாது உடன் மதீனா செல்லும் வரை அவ்வாறு இருந்தார். இருவருமே ஆரம்பக் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் ஆவர்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 558,559 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 72 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஹஸ்ரத் மிக்தாது பின் அஸ்வத் இருவரும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த சம்பவம் இவ்வாறாகும். இருவரும் மக்கத்து குறைஷிகளின் இணை வைப்பவர்களுடன் இணைந்து மதீனாவுக்கு வந்தார்கள். ஆனால் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொள்வதற்காக வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் உடைய தலைமையில் முஸ்லிம்களின் ஒரு படையை சனிஅத்துல் மரா என்ற ராபிக் நகருக்கு வடக்கில் 55 மைல் தொலைவில் மதீனா முனவ்வராவில் இருந்து 200 மைல் தொலைவிலுள்ள இடத்திற்கு அனுப்பினார்கள்.

குறைஷிகளின் படையை இக்ரிமா பின் அபுஜஹில் தலைமையேற்று நடத்தி வந்தார். இரு கூட்டத்திற்கும் இடையில் சண்டை நடைபெறவில்லை. சஅத் பின் அபி வக்காஸ் விட்ட ஓர் அம்பைத் தவிர –அல்லாஹ்வின் வழியில் வீசப்பட்ட முதல் அம்பு ஆகும். அந்த நாளில் உத்பா பின் கஸ்வான் மிக்தாத் ஆகியோர் ஓடிவந்து முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டனர்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 4 பக்கம் 1480,1481 மிக்தாத் பின் அஸ்வத், பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

நிராகரிப்பவர்களின் படையுடன் வந்தனர். அதுபற்றி கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தற்காப்பு நடவடிக்கை மற்றும் ஆயுதம் தாங்கிய போர் குறித்து குறிப்பிட்டவாறு வரலாற்று நூல்களின் அடிப்படையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

ஆயுதம் ஏந்தி செய்யும் ஜிஹாதுக்கு முதல் திருக்குர்ஆன் வசனமாவது, 12 ஸபர் ஹிஜ்ரி 2 –ஆம் ஆண்டு இறங்கியது. தற்காப்புப் போர் குறித்து இறைவனது சைக்கினை அப்போது தரப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்த ஆரம்ப வேலைகள் முடிந்ததும் இவ்வாறு ஜிஹாது தொடங்கியது. வரலாற்றில் இருந்து பாதுகாப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு திட்டங்களைத் தீட்டினார்கள். இது சண்டையை தடுப்பதற்கான மிகவும் அரசியல் ரீதியான திட்டமாக இருந்தது என்பதற்கான வெளிப்படையான ஆதாரமாகும்.

அவை என்னவெனில் அவர்கள் தாமே பயணம் செய்து பக்கத்தில் இருக்கக்கூடிய கோத்திரத்தார்களோடு சமாதான ஒப்பந்தம் செய்தார்கள். மதீனாவின் சுற்றுப்புறம் பாதுகாப்பாக இருப்பதற்காக அதனைச் செய்தார்கள். இதற்காக அன்னார் குரைஷிகளின் சிரியா செல்லும் பாதையில் இருந்த சுற்று வட்டாரங்களுடன் சமாதானம் செய்தார்கள். அந்த கோத்திரத்தாரிடமிருந்து மக்கத்து குரைஷிகள் முஸ்லிம்களுக்கு எதிராக உதவி வாங்க முடியும் என்பதை எவரும் புரிய முடியும். இவர்களின் பகைமையினால் கடும் ஆபத்துகள் நேரலாம்.

இரண்டாவது திட்டம் அன்னார் சிறு சிறு குழுக்களை அனுப்பி மதீனாவுக்கு அக்கம் பக்கத்து ஊர்களுக்கு குரைஷிகளின் நட்புக் கோத்திரத்தார் குறித்து அறிந்து வர அனுப்பினார்கள். முஸ்லிம்கள் அறியாமல் இல்லை என்று குறைஷிகள் புரிந்து கொள்வதற்காக இதனை செய்தார்கள். இதன் மூலம் மதீனா திடீர் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காகவும் இதனை செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்து வைத்த மூன்றாவது திட்டம் என்னவெனில், மதீனா வந்ததும் இந்த குழுக்களை அனுப்பியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இதன் மூலமாக மக்காவுக்கு அருகில் உள்ள பலவீனமான ஏழை முஸ்லிம்களுக்கு மதீனா வந்து சேர வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாகும். ஏனெனில் அதுவரை மக்காவில் உள்ளத்தளவில் முஸ்லிம்களாகவும், குரைஷிகளின் அநீதிக்குப் பயந்து வெளிப்படையில் வெளிக்காட்ட முடியாமலும் இருந்தார்கள். இவர்களின் ஏழ்மையினால் ஹிஜ்ரத் செய்ய சக்தி இல்லை எனில் அவர்களை ஹிஜ்ரத் செய்ய விடாமல் குரைஷிகள் பலவந்தமாக தடுக்கவும் செய்தனர்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا لَكُمْ لَا تُقَاتِلُوْنَ فِيْ سَبِيْلِ اللّٰهِ وَالْمُسْتَضْعَفِيْنَ
مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ وَالْوِلْدَانِ الَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَآ اَخْرِجْنَا
مِنْ هٰذِهِ الْقَرْيَةِ الظَّالِمِ اَهْلُهَا ۚ وَاجْعَلْ لَّنَا
مِنْ لَّدُنْكَ وَلِيًّا ۙۚ وَّاجْعَلْ لَّنَا مِنْ لَّدُنْكَ نَصِيْرًا

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பாதுகாக்க சண்டையிடாமல் இருக்க எந்தக் காரணமும் இல்லை. அந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பலவீனமாக இருந்து கொண்டு துஆ செய்கின்றார்கள். எங்களது இறைவா! இந்த அநீதியிழைக்கும் மக்கள் வசிக்கும் இந்த பூமியிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக. உன் புறமிருந்து எங்களுக்கு நண்பர்களையும் உதவியாளர்களையும் ஏற்படுத்துவாயாக. **(4:76)**

இந்தக் குழுக்களை அனுப்பியதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இவ்வாறு இருக்கக்கூடிய மக்களுக்கு தப்பி வருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்துவதற்காக ஆகும். அவர்கள் குரைஷி காஃபிர்களுடன் கலந்திருக்கிறார்கள். மதீனாவின் பக்கம் வந்து விடுவதற்காக அக்குழு அனுப்பப்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதல் குழுவை உபைதா பின் அல் ஹாரிஸ் தலைமையில் அனுப்பினார்கள். அவர்கள் இக்ரிமா பின் அபுஜஹில் உடைய கூட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. அதிலிருந்த இரு பலவீனமான முஸ்லிம்கள் குரைஷிப் படையில் சேர்ந்து வந்தவர்கள் முஸ்லிம்களுடன் வந்து சேர்ந்து கொண்டனர். இந்த வகையில் அறிவிப்பு வருகிறது.

இந்தக் குழு குரைஷிப் படையின் முன் வந்தபோது மிக்தாத் பின் அம்ர், உத்பா பின் கஸ்வான் இருவரும் பனூ ஷஹ்ரா பனூ நவ்பல் உடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் எதிரிகளை விட்டு அகன்று முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டனர். இருவரும் முஸ்லிம்களாக இருந்தனர். மறுப்பவர்களை விட்டு அகன்று முஸ்லிம்களிடம் வந்து சேர்வதற்காகவும் இந்தக் குழுக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். இதனால் அத்தகைய குரைஷிகளிடமிருந்து தப்பி முஸ்லிம்களிடம் வந்து சேர்ந்து கொள்வதற்காக வாய்ப்பு கிடைப்பதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த நான்காவது திட்டம், குரைஷிகளின் வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவதாகும். அவர்கள் மக்காவிலிருந்து சிரியாவுக்கு சென்று வரும்போது மதீனாவுக்கு அருகிலேயே கடந்து சென்றனர். இவர்கள் எந்த வழியாகச் சென்றாலும் அம்மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிக் கொண்டே சென்றனர். மதீனாவுக்கு அக்கம் பக்கத்தவர்களிடம் பகைமை மூட்டி விட்டால் முஸ்லிம்களுக்கு அது மிகவும் ஆபத்தாகும். இரண்டாவது இந்த கூட்டம் எப்போதும் சென்று வந்தது. இப்போது எல்லாராலும் புரிய முடியும்.

இவ்வாறு ஒரு படை முஸ்லிம்களுக்கு அருகில் கடந்து செல்வது ஒருபோதும் ஆபத்துக்கு அப்பாற்பட்டதல்ல. மூன்றாவது குரைஷிகளின் வாழ்வாதாரம் எப்போதும் வணிகத்தின் மூலமே நடந்தது. இந்நிலையில் குரைஷிகளின் நடமாட்டம் இந்த அநீதியான செயல்களைத் தடுப்பது ஆகியவை சமாதானத்திற்கு மிகவும் உறுதியான தாக்கத்தை தரக்கூடிய வழியாகும். இல்லையென்றால் வியாபாரத்தின் பாதை அடைபட்டு விடுமே என்று பயப்படுவார்கள். இந்த வகையில் வரலாறு இதற்கு சாட்சி பகர்கிறது. குரைஷிகளை சமாதானத்தின் பக்கம் இழுத்து வந்த விஷயம் இவர்களின் வியாபாரக் குழுவைத் தடுத்து நிறுத்தியதேயாகும்.

இது மிகவும் அறிவார்ந்த ஒரு திட்டமாக இருந்தது. அது குறித்த நேரத்தில் பலன் தந்தது. பிறகு இந்த குரைஷி குழுக்களின் நோக்கம் சந்தர்ப்பம் கிடைத்தால் முஸ்லிம்களை அழிப்பதாக இருந்தது. சில குழுக்கள் குறிப்பாக இதற்காகவே அனுப்பப்பட்டன. அவர்களின் இலாபம் முழுக்க முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுத்துவதற்காகவே அக்குழுக்கள் அனுப்பப்பட்டன. இந்த சூழ்நிலையில் ஒவ்வொருவரும் புரிய முடியும். இந்தக் குழுக்களைத் தடுத்து நிறுத்துவது முற்றிலும் அனுமதிக்கப்பட்ட திட்டமாகும்.

**(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 323,324)**

சரிய்யா பின் உபைதா பின் ஹாரிஸ் என்பவர் குரைஷி படையிலிருந்து வெளியேறி முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டார். இவரைப் பற்றி மேலும் குறிப்பு உள்ளது. அதன் ஒரு பகுதியை முந்தைய குத்பாக்களில் கூறியும் இருக்கிறேன். இருந்தாலும் சிறிது கூறுகிறேன். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரபிவுல் அவ்வல் மாதத்தின் ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நெருங்கிய உறவினராக உபைதா பின் ஹாரிஸ் முத்தல்பியின் தலைமையில் **60–70** பேர் கொண்ட குழுவை அனுப்பினார்கள். இதன் நோக்கமும் குரைஷிகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதாகவே இருந்தது. சீரத் காத்தமுன் நபிய்யீனிலிருந்து எடுத்துக் கூறுகிறேன்.

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் அவருடன் இருந்தவர்கள் சிறிது தூரம் கடந்தபோது சனிஅத்துல் விதா என்ற இடத்தை அடைந்தார்கள். அங்கு திடீரென்று பார்க்கிறார்கள். அங்கு குரைஷிகளின் **200** இளைஞர்களைக் கொண்ட படை ஒன்று இக்ரிமா பின் அபுஜஹில் தலைமையில் முகாமிட்டிருந்தது. இக்குழுவும் ஒன்றையொன்று சந்தித்தது. அம்புகளும் வீசப்பட்டன. பிறகு இணை வைப்பவர்களின் குழு பயந்து ஓடியது. முஸ்லிம்கள் அவர்களைப் பின்தொடரவில்லை.

இணை வைப்பவர்களின் படையில் இருவர் மிக்தாத் பின் அம்ர், உத்பா பின் கஸ்வான் ஆகியோர் இக்ரிமா பின் அபுஜஹில் படையிலிருந்து தப்பி முஸ்லிம்களுடன் வந்து இணைந்து கொண்டனர். அவர்கள் இதற்காகவே குரைஷிகளுடன் வந்தார்கள். சந்தர்ப்பம் பார்த்து முஸ்லிம்களுடன் வந்து இணைந்து கொள்வதற்காகவே வந்திருந்தனர். ஏனெனில் அவர்கள் உள்ளத்தால் முஸ்லிம்களாக இருந்தனர். பலவீனம் இருந்ததால் குரைஷிகளை விட்டு ஹிஜ்ரத் செய்ய முடியவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்:

குரைஷிகளுக்கு அதைரியம் ஏற்பட்டிருக்கும். இதனை ஒரு கெட்ட சகுனமாகக் கருதி அவர்கள் திரும்பிச் சென்றிருக்கலாம். வரலாற்றில் குரைஷிப் படைகள் ஒரு வணிகக்குழு தான் என்று குறிப்பிடப்படவில்லை. இப்னு இஸ்ஹாக் அது ஒரு பெரும் படை என்று கூறுகின்றார். அவர்கள் ஒரு குறிப்பான நோக்கத்திற்காக வந்திருந்தார்கள். அவர்களின் நிய்யத் நல்லதல்ல என்பது உறுதியானதாகும். அல்லாஹ்வின் அருளால் அவர்களிடமிருந்து இருவர் புறப்பட்டு முஸ்லிம்களுடன் வந்து சேர்ந்ததைப் பார்த்துவிட்டு அவர்களுக்கு தைரியம் போய் விட்டது. இது சஹாபாக்களுக்கு பயனுடையதாக ஆகிவிட்டது. இவ்வாறு முஸ்லிம் ஆன்மாக்கள் குரைஷிகளிடமிருந்து ஈடேற்றம் பெற்றன. ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் மற்றும் அவரது விடுதலை செய்யப்பட்ட அடிமை கப்பாப் ஆகிய இருவரும் மக்காவை விட்டு மதீனா நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள்.

**(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 328,329)**

திப்காதுல் குப்ராவில் ஒரு அறிவிப்பு உள்ளது. குபா என்ற இடத்தில்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சல்மா அஜ்லானி இடம் தங்கினார்கள். உத்பா மதீனா வந்து சேர்ந்ததும் அபாத் பின் பஷீர் இடம் தங்கினார்கள். ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான், ஹஸ்ரத் அபுதிஜானா இருவருக்கும் இடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 73 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உத்பா பின் கஸ்வான் பற்றி இன்னும் சில விஷயங்கள் உள்ளன. அடுத்து குறிப்பிடுவேன்.

இப்போது நான் ஓர் அறிவிப்பு செய்ய விரும்புகிறேன். அல் ஃபஸ்ல் பத்திரிகை இணையதளம் (website) ஒன்று தொடங்கியுள்ளோம். அதனை அறிவிக்கின்றேன். அடுத்து இரண்டு ஜனாஸா உள்ளது. மர்ஹூம்களைப் பற்றியும் குறிப்பிடுவேன். அல் ஃபஸல் பத்திரிகை 106 வருடங்களை நிறைவு செய்த நிலையில் இலண்டனிலிருந்து அல் ஃபஸ்ல் ஆன்லைன் எடிசன் (online edition) தொடங்கப்படுகிறது. இந்த அல் ஃபஸ்ல் 106 வருடங்களுக்கு முன்பு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது அனுமதியுடன் 18 ஜூன் 1913 –ல் தொடங்கினார்கள்.

பாகிஸ்தான் உருவான பிறகு சில காலம் லாஹூரிலிருந்து வெளி வந்தது. பிறகு முஸ்லிஹ் மவ்வூது தலைமையில் ரப்வாவில் இருந்து வெளிவந்தது. இந்த புராதன பத்திரிகையான அல் ஃபஸ்ல் இலண்டனிலிருந்து ஆன்லைன் பத்திரிகையாக 13 டிசம்பர் 2019 முதல் ஆரம்பமாகிறது. இன்று தொடங்கும் இன்ஷா அல்லாஹ். உலகின் எல்லா பக்கமும் எளிதில் Internet மூலம் இது காணக் கிடைக்கும். இதன் website –ன் பெயர் alfazlonline.org ஆகும். முதல் இதழ் அதில் கிடைக்கும்.

நமது தலைமையக IT team அதிகமாக உழைத்துள்ளது. அல் ஃபஸ்ல் உடைய முக்கியத்துவம் குறித்து அதில் உள்ளது. இறை இருப்பு குறித்தும் இறை வசனங்கள் கிடைக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்கள் கிடைக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டல்களின் மேற்கோள்கள் கிடைக்கும். அதுபோன்று அஹ்மதி கட்டுரையாளர்களின் கட்டுரைகள் பொதுவான கருத்துக்கள் இருக்கும். அஹ்மதி கவிஞர்களின் நஸ்ம்கள் இருக்கும். இந்த பத்திரிகை, இணையதளம் தவிர டுவிட்டரிலும் இருக்கும். Android app –ம் உருவாக்கப்பட்டுள்ளது. Social Media மூலமாக அறியலாம். ஏனெனில் இது தினசரி வாடிக்கையாகி விட்டது.

எனவே அதன் மூலம் படிப்பவர் பயனடையலாம். அதுபோன்று எழுத்துத் திறமை உள்ளவர்கள் தமது படைப்புகள் மூலம் உதவி செய்யுங்கள். அதன் மூலம் நல்ல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரும். இந்த இணையதளத்தின் தினசரி வெளியீட்டின் PDF File –ம் இருக்கும். படித்ததை அப்படியே Download –ம் செய்து கொள்ளலாம். Print எடுத்துப் படிப்பவர்கள் படிக்க முடியும். திங்கள்கிழமை குத்பாவின் ஒட்டுமொத்த வடிவம் வெளியிடப்படும். அந்தந்த Fresh (புதிய) குத்பாவின் சுருக்கமும் வெளியிடப்படும். இது ஜுமுஆவுக்குப் பிறகு தொடங்கப்படும் – இன்ஷா அல்லாஹ்.

இரு மர்ஹூம்களைப் பற்றி குறிப்பிடுவேன். ஜனாஸா தொழ வைப்பேன். முதலாவது கண்ணியத்திற்குரிய ஸய்யிதா தன்வீருல் இஸ்லாம் சாஹிபா. இவர் மர்ஹூம் ஹஃபீஸ் அஹ்மது சாஹிப் அவர்களுடைய மனைவியாவார். 7 டிசம்பர் 2019 அன்று தமது 91 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்த பெண். இவரது குடும்பத்தில் தந்தையார் மீர் அப்துஸ் ஸலாம். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கலப்பற்ற சஹாபி ஹஸ்ரத் மீர் ஹிஸாமுத்தீன் சாஹிப் உடைய கொள்ளுப்பேத்தி ஆவார். ஸய்யிது மீர் ஹாமீது அஹ்மது ஷாஹ் சாஹிப் உடைய பேத்தியாவார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மருமகள் ஆவார். மீர் ஹிஸாமுத்தீன் சாஹிப் பிரபலமான சஹாபி.

1839 –ல் சியால்கோட்டில் பிறந்தவர். சியால்கோட்டில் பிரபலமான மனிதர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட்டில் தங்கியிருந்தபோது ஹக்கீம் சாஹிப் பணிவிடை மற்றும் மருத்துவம் செய்து வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவரது வீட்டின் ஒரு பகுதியில்தான் தங்கியிருந்தார்கள். 1877 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட் சென்றபோது ஹக்கீம் சாஹிப் உடைய வீட்டில் ஒரு விருந்திக்கு சென்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூய நடைமுறையைப் பார்த்ததால் அன்னார் வாதம் செய்ததும் ஹக்கீம் சாஹிப் ஒரு நல்லியல்பும் தொலைநோக்கும், நுண்ணறிவும் உடையவர்களைச் சார்ந்தவராக இருந்தார். எனவே உடனே ஏற்றுக் கொண்டார்கள். சியால்கோட்டில் ஏற்றுக் கொண்டவர்களிடம் பற்று நேசம் இருந்தது. 29 டிசம்பர் 1890 –ல் ஹிஸாமுத்தீன் சாஹிப் பைஅத் செய்தார். பைஅத் ரிஜிஸ்டர் படி இவரது பைஅத் 213 ஆக இருந்தது. இவரது மனைவி ரோசா பேகம் சாஹிபா பைஅத் 246 ஆகும். இவர் 7 பிப்ரவரி 1892 –ல் பைஅத் செய்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலில் இவரைப் பற்றி எழுதியுள்ளார்கள். இஸாலே அவ்ஹாம், ஆஸ்மானி பைஸலா, ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், துஹ்ஃபா கைஸரிய்யா, சிராஜே முனீர், ஹகீகத்துல் வஹி, மல்ஃபூஸாத் தொகுதி 5 என பல இடங்களில் இவரைப் பற்றி தமது களங்கமற்ற மாநாடுகளில் பங்கு பெறக்கூடியவர், ஜல்ஸா டைமண்ட் ஜூபிளியில் பங்கு பெற்றவர், அமைதியான ஜமாஅத் மக்களில் இவரும் ஒருவர் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

எவ்வாறிருப்பினும் கண்ணியத்திற்குரிய ஸய்யிது தன்வீருல் இஸ்லாம் சாஹிபா அவருடைய குடும்பத்தைச் சார்ந்த பெண்ணாக இருந்தார். இவர் 1928 –ல் சியால்கோட்டில் பிறந்தார். பிறகு 1948 –ல் இவரது திருமணம் ஹஸ்ரத் மிர்ஸா ஹஃபீஸ் அஹ்மது சாஹிப் அவர்களுடன் நடந்தது. இவ்வாறு இவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மருமகள் ஆனார். இவருக்கு 1956 முதல் 2008 வரை பல்வேறு காலகட்டங்களில் தலைமையக லஜ்னாவில் பொறுப்பு வகிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் சிறநத் அன்பு தொடர்பிருந்தது. தஹஜ்ஜுத்தில் அதிக கவனம் செலுத்துபவர்.

இவரது பணியாளர் கூறுகிறார்: இவர் வஃபாத் ஆகும் அந்த இரவில் 3.00 மணிக்கு எழுந்து தஹஜ்ஜுத் தொழுது விட்டு உறங்கினார். அதே நிலையில் வஃபாத் ஆகிவிட்டார்.

இவரது மகள் கூறுகிறார்: என்னிடம் கூறியிருந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குடும்பத்தில் அன்னாரின் மருமகளாக இங்கு வந்தபோது இரண்டாவது கலீஃபாவும், உம்மே நாஸிர் அவர்களும் மிகவும் அன்பு செலுத்தினார்கள். அம்மாவின் நினைப்பே மறந்து விட்டது. பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மேற்கோள்களும் நினைவு வார்த்தைகளும் மிகச் சிறந்த நினைவு கொள்ளத்தக்கவையாக உள்ளன. அல்லாஹ் இவர் மீது மன்னிப்பின் நடைமுறையைக் காட்டுவானாக. கருணை காட்டுவானாக. தகுதிகளை உயர்த்துவானாக.

இரண்டாவது நமது மர்ஹூமா சிஸ்டர் ஹாஜா சுகுரா நூரியா சாஹிபா உடையது. இவர் 1 டிசம்பர் 2019 அன்று வஃபாத் ஆனார். இவர் 1927 –ல் பிறந்தார். ஆரம்ப காலத்தை வாஷிங்டன் டி.சி –யில் கழித்தார். 1960 –களில் பள்ளியில் வரலாறு ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு உலக வரலாற்றில் M.A. பட்டம் பெற்றார். பிறகு ஓய்வு பெற்ற பிறகு புராட்டெஸ்டெண்ட் மிஷனரி ஆக வேண்டும் என்ற ஆசை இருந்தது. பிறகு அவருக்கு ஈஸா (அலை) இறைவனது மகனல்ல என்ற விஷயம் தெரிய வந்தது. பிறகு வேறு வழியைத் தேர்ந்தெடுக்க விரும்பினார்.

பிறகு 1968 –ல் உறுதியாக இவர் சர்ச்சிற்கு செல்வதை விட்டு விட்டார். அமெரிக்கா, மெக்ஸிகோ, கனடா நாடுகளுக்குப் பயணம் செய்தார். ஆப்பிரிக்காவில் பல பல்கலைக்கழகங்களில் படிப்பதற்காக ஒரு வருடம் விடுமுறை எடுத்தார். பிறகு ஐரோப்பா பயணம் மேற்கொண்டார். மனதில் எழுந்த மார்க்க ரீதியான கேள்விகளுக்கு விடை தேடிக் கொண்டிருந்தார். பிறகு வாஷிங்டன் டி.சி திரும்பி வந்தபோது இவருக்கு இஸ்லாம் மார்க்கம் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. அப்போது தற்செயலாக விமான நிலையத்தில் இவருக்கு தனது நண்பரின் மகனைச் சந்திக்க நேரிட்டது. இதானல் சில காலம் முன்பு அஹ்மதிய்யத்தை ஏற்றார்.

மீர் முஹம்மது நாஸிர் சாஹிப் முபஷ்ஷிர் சாஹிபை அழைக்க விமான நிலையம் சென்றார். அப்போது இவருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்

இஸ்லாம் மார்க்கம் பற்றி எடுத்துரைத்தார். தொடர்ந்து நடந்தது. சிறிது சிறிதாக இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டார். எந்தக் கொள்கையைத் தேடினாரோ அது கிடைத்தது. 1979 –ல் கனவில் திருக்குர்ஆன் வார்த்தை மற்றும் கலிமா ஷஹாதத்தையும் பார்த்தார். பிறகு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் தான் உண்மை என்று உறுதி ஏற்பட்டது. உடனே அவர் பைஅத் செய்தார்.

பைஅத் செய்த பிறகு பல வகையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றினார். லஜ்னா இமாயில்லாஹ் அமெரிக்காவின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றதுடன் மட்டுமின்றி செயல்ரீதியாக பங்கு பெற்றார். 1986 –ல் வாஷிங்டன் டி.சி –யின் உள்ளூர் சதர் லஜ்னாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐந்து வருடங்கள் அந்த பொறுப்பை வகித்தார். அத்துடன் தேசிய நாயிப் சதராக தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அத்துடன் பல்வேறு பகுதிகளில் தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. 1995 –ல் ஹஜ் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கட்டளைக்கேற்ப அன்னாரது வழிகாட்டலின் பேரில் திருக்குர்ஆனின் Five Volume Commentary–க்கு 118 பக்கங்கள் கொண்ட Index தயாரிக்கும் குழுவில் இணைந்திருந்தார். இதில் சிறந்த பங்கு வகித்தார். ஜமாஅத்திலும் லஜ்னாவிலும் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதினார். 1997 மற்றும் 1998 –களில் ஞாயிறுகளில் அத்ஃபால் வகுப்புகளை நடத்துவதற்கான ஏற்பாடு செய்தார். நாஸிராத்திற்காக அஹ்மதி Summar Camp –ல் தொண்டாற்றினார். பல வருடங்களாக அஹ்மதிய்யா National Humanity Rights Committee –யில் தொண்டு செய்தார். இதன் மூலம் மிகவும் வீரமாக பாகிஸ்தானில் நடக்கும் கொடுமைகள் சம்பந்தமாக டாக்குமெண்டரி தயார் செய்தார்.

கண்ணியத்திற்குரிய சம்ஷாத் நாஸிர் சாஹிப் முபல்லிக் அவர்கள் கூறுகிறார்கள்: இந்தப் பணிகளுக்கும் மேலாக இவரது பணி தப்லீக் ஆகும். தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. எல்லா பணிகளையும் விட தப்லீகிற்கு முக்கியத்துவம் தருவார். பல ஆண்டுகளாக லஜ்னாவின் தேசிய தப்லீக் செயலராக இருந்தார். ரேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகளிலும் தப்லீக் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். பல்கலைக்கழக வளாகம், சர்ச்சுகள் வீடுகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதில் செயல்பூர்வமாக இருந்தார். ஜமாஅத் நூல்களை பல்வேறு பகுதிகளில் விநியோகம் செய்வதற்கு முறையான திட்டங்கள் தீட்டி இருந்தார்.

சம்ஷாது சாஹிப் அறிக்கை இவ்வாறு உள்ளது. சிஸ்டர் சுகுரியா நூரியாக சாஹிபா பர்தாவை மிகவும் பேணுபவராக இருந்தார். எப்போதும் பாகிஸ்தானி புர்கா அணிந்திருப்பார். இவரது புர்கா இவரது எந்தப் பணிக்கும் தடையாக இருந்ததில்லை. ஜமாஅத் பணிக்காக அரசாங்க அதிகாரிகள், செனட்டர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதிருந்தது. அப்போதும் புர்கா அணிந்திருப்பார். எல்லா பணிகளையும் நன்றாக செய்வார். தப்லீக் பணிகளில் முபல்லிக்மார்களுக்கு நிறைய உதவியாக இருப்பார்.

சம்ஷாத் சாஹிப் கூறுகிறார்: நான் புதிதாக வந்தேன். என்னை அமர வைத்து அமெரிக்காவின் வரலாறு கூறினார். பணியில் அது உதவியாக இருந்தது.

பிறகு எழுதுகிறார்: இவருக்கு கிலாஃபத்தின் மீது பெரும் மரியாதை இருந்தது. பெரும் தொடர்பு கொண்டிருந்தார்.

நான் 2018 –ல் அமெரிக்கா சென்றிருந்தபோது கூட வீல் சேரில் இருந்தவாறு என்னை சந்திக்க வந்திருந்தார். மிகவும் கஷ்டத்துடன் வந்திருந்தார். குத்பாக்களை மிகவும் கவனமாகக் கேட்பார். ஆரம்பத்தில் MTA இல்லாதபோது கேஸட் மூலம் குத்பா வரும்போது குத்பாவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க மிகவும் உதவி செய்து வந்தார். தொழுகையை ஜமாஅத்துடன் பேணுபவர். நான் பார்த்த போதெல்லாம் பள்ளியிலேயே பார்த்துள்ளேன். முறைப்படி தொடர்ந்து ஜமாஅத்துடன் தொழுவார்.

அல்லாஹ் இவருடன் மன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையைக் காட்டுவானாக. இவரது தகுதியை உயர்த்துவானாக. சேவையில் உந்தப்பட்டு பணி செய்யக்கூடிய, பற்று, களங்கமின்மை மிக்க இன்னும் நிறைய மக்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு வழங்குவானாக.

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

அன்னார் கூறினார்கள்: வேண்டாம்; வேண்டாம். இதுவரை எனக்கு அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. நீங்கள் இப்போது அமைதியாக உங்கள் கூடாரத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள். இவ்வாறு எல்லாரும் ஒன்று இரண்டாக மலை அடிவாரத்தை விட்டு அகன்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சச்சாவுடன் வீட்டுக்குத் திரும்பினார்கள். குரைஷிகளின் காதுகளில் இது விழுந்து இருந்தது. இவ்வாறு மறைமுகமாக ஒரு கூட்டம் நடந்தது என்று தெரிய வந்தது. அவர்கள் யஸ்ரப்வாசிகளின் கூடாரங்களுக்கு சென்று கூறினார்கள். உங்களுக்கும் எமக்கும் இடையில் நீண்ட தொடர்பு உள்ளது. அதனை முறிக்க விரும்பவில்லை. ஆனால் கடந்த இரவு முஹம்மது (ஸல்) அவர்களுடன் நீங்கள் மறைமுகமான ஓர் ஒப்பந்தம் போட்டிருப்பதாக அறிகிறேன். என்ன விவகாரம்? அவ்ஸ், கஸ்ரஜ்களிலுள்ள சிலை வணங்கிகளின் சிலருக்கு சம்பவம் தெரியாது. அவர்கள் வியந்தவாறு மறுத்தனர். இப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்றனர்.

அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் என்பவனும் அந்தக் குழுவில் இருந்தான். அவன் கூறினான்: அவ்வாறு ஒருபோதும் நடக்காது. யஸ்ரப்வாசிகள் எனக்குத் தெரியாமல் அவ்வாறு ஒப்பந்தம் போட சாத்தியமில்லை. உடனே குரைஷிகளின் சந்தேகம் அகன்றது. அவர்கள் திரும்பிச் சென்றனர். ஆனால் பிறகு விசாரித்ததில் குரைஷிகளுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரிய வந்தது. யஸ்ரப் வாசிகள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்தார்கள் என்று தெரிய வந்தது. உடனே சிலர் யஸ்ரப் போய் விட்டனர். ஸஅத் பின் உபாதா ஏதோ ஒரு காரணத்தில் அங்கு தங்கி இருந்தார். அவரை அம்மக்கள் பிடித்தனர். மக்காவின் கற்கள் நிறைந்த பகுதியில் அழைத்துச் சென்று தலை முடியைப் பிடித்து அங்குமிங்கும் திருப்பினர். அஸர் பின் முத்திம், ஹாரிஸ் பின் ஹர்ப் என்ற உடனிருந்தவர்களுக்க விஷயம் தெரிய வந்தது. அவர்கள் அந்த அநீதியிழைக்கும் குரைஷிகளிடமிருந்து விடுவித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 227–229, 232,233)

சஅத் பின் உபாதா தொடர்பாக இன்னும் சில கருத்துக்கள் கூற வேண்டியதுள்ளது. வரக்கூடிய குத்பாக்களில் கூறப்படும்.

---

**அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதிராக எனது எந்தக் கொள்கையும் இல்லை**

நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் காஃபிர் அல்லன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஆவான் என்பது எனது கொள்கையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி 'வலாகிர் ரஸூலல்லாஹி வ காத்தமன் நபிய்யீன்' (அவர்கள் நபிமார்களுக்கு முத்திரை ஆவார்) என்பது எனது ஈமான் ஆகும். நான் எனது இந்த வாக்குமூலத்தின் உண்மைக்கு சான்றாக இறைவனுக்கு எத்தனை தூய பெயர்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு திருக்குர்ஆனில் எழுத்துக்கள் இருக்கின்றனவோ, எந்த அளவுக்கு இறைவனின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேன்மைகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்கு நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

அல்லாஹ் மற்றும் ரஸூலின் கூற்றுக்கு எதிராக எனது எந்தக் கொள்கையும் இல்லை. எவர் அவ்வாறு கருதுகிறாரோ அது அவருடைய சொந்த தவறான எண்ணமாகும். எவர் இப்போதும் என்னை காஃபிர் எனக் கருதுகிறாரோ, காஃபிர் எனக் கூறுவதிலிருந்து விலக மாட்டாரோ அவர் மரணத்திற்குப் பிறகு கேள்வி கேட்கப்படுவார் என உறுதியாக நினைவில் கொள்ளட்டும். இறைவன் மீதும், இறைதூதர் மீதும் எல்லா மக்களுக்கும் இருக்கும் ஈமானை தராசின் ஒரு தட்டிலும், எனது ஈமானை இன்னொரு தட்டிலும் வைத்தால் அல்லாஹ்வின் அருளால் எனது இந்தத் தட்டுதான் அதிக எடையுள்ளதாக இருக்கும் என நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

(கராமாத்துஸ் ஸாதிகீன் பக்கம் 25 ரூஹானி கஸாயின் தொகுதி 7 பக்கம் 67)

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வு கொண்ட சஹாபி ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 டிசம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ- الرَّحْمٰنِ الرَّحِيمِ- مٰلِكِ يَوْمِ الدِّينِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ- صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

கடந்த குத்பாவில் சஹாபாக்களின் குறிப்பில் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் பற்றி கூறி வந்தேன். இக்குறிப்பில் இன்னும் சில கருத்துகள் கூற வேண்டியதுள்ளன. அவற்றைக் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு தமது மாமி மகனான அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் தலைமையில் ஒரு படையை நக்லாவின் பக்கம் அனுப்பினார்கள். அதில் உத்பாவும் இருந்தார்கள். இவரைப் பற்றி வேறு ஒரு சஹாபியின் குறிப்பில் ஓரளவுக்கு கூறி விட்டேன். இருந்தபோதிலும் சிறிது கூறுகிறேன்.

சீரத் காத்தமுன் நபிய்யீனில் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகளில் அமைதி மற்றும் அசைவு குறித்து மிகவும் அருகில் சென்று அறிந்து வர வேண்டும் என்று எண்ணி இருந்தார்கள். அதன் மூலம் தேவையான எல்லா தகவல்களையும் குறித்த நேரத்தில் அறிய வேண்டும் எனவும் மதீனா எல்லா வகையான திடீர் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார்கள். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எட்டு முஹாஜிரீன்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார்கள். திட்டமிட்டவாறு அதில் குரைஷிகளின் பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தவர்களை இணைத்தார்கள். இதனால் குரைஷிகளின் மறைவான திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவ்வாறு செய்தார்கள்.

அந்த குழுவுக்கு தமது மாமி மகன் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷை தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த குழுவை அனுப்பும்போது எங்கு எதற்காக அனுப்பப்படுகிறோம் என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெரியப்படுத்தவில்லை. செல்லும்போது அவர்களின் கையில் மூடப்பட்ட ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். இந்தக் கடிதத்தில் உங்களுக்கு வழிகாட்டல் உள்ளது. மதீனாவிலிருந்து இரண்டு நாள் பயணம் சென்ற பிறகு இந்தக் கடிதத்தைத் திறந்து அதில் உள்ளபடி செயல்பட வேண்டும் என்று கூறினார்கள். அவர்கள் இரண்டு நாள்கள் பயணத்தை முடித்ததும் ஹஸ்ரத் அப்துல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கடிதத்தைத் திறந்து பார்த்தார்கள். அதில் இவ்வாறு கட்டளை இருந்தது.

நீங்கள் மக்கா மற்றும் தாயிபுக்கு நடுவில் நக்லா பள்ளத்தாக்கு செல்லுங்கள். அங்கு சென்று குரைஷிகளின் செய்திகளை அறிந்து, அது குறித்து எனக்கு தகவல் தெரிவியுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடிதத்தின் கீழ் ஒரு வழிகாட்டலும் தந்திருந்தார்கள். இந்த வேலையைப் பற்றி தெரிந்த பிறகு உங்களுடன் இருப்பவர் யாராவது இந்தக் குழுவில் இருப்பதிலிருந்து விலக விரும்பினால் விஷயத்தை தெரிந்த பிறகு ஊருக்குத் திரும்ப விரும்பினால், அனுப்பப்பட்ட அக்குழுவில் எவருக்கும் அதிலிருந்து விலக விருப்பம் இருந்தால், ஆட்சேபனை இருந்தால், திரும்பி வர விரும்பினால் திரும்பி வந்து விடலாம். எந்தக் கட்டுப்பாடும் இல்லை. திரும்ப விரும்புபவரை உடனே திரும்பிச் செல்ல அனுமதித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் குழுவில் இருப்பவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கூற்றை எடுத்துக் கூறினார்கள். உடனே அனைவரும் மகிழ்ச்சியுடன் இந்த தொண்டிற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு இந்த குழு நக்லா நோக்கிச் சென்றது. வழியில் சஅத் பின் அபீ வக்காஸ், உத்பா பின் கஸ்வான் இருவரின் ஒட்டகமும் காணாமல் போய் விட்டது. அவர்கள் தமது ஒட்டகத்தை தேடித்தேடி பின்தங்கி விட்டார்கள். அதிகமாக தேடியும் அவர் தம்முடன் வந்தவர்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தக் குழுவில் ஆறு பேர் மட்டுமே இருந்தனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் கிழக்கத்திய வரலாறுகளை எழுதுகிற மேற்கத்திய கட்டுரையாளராகிய மார்குலிஸ் பற்றி கூறுகிறார்கள். அவர் இந்த இடத்தில் எழுதுகிறார்: சஅத் பின் அபீ வக்காஸ் உத்பா பின் கஸ்வான் இருவரும் வேண்டுமென்றே தமது ஒட்டகத்தை விட்டுவிட்டனர். அதனை சாக்காக வைத்து பின்தங்கி விட்டனர் என்கின்றார்.

அன்னார் கூறினார்கள்: இன்னுயிரையும் எய்தக்கூடிய அந்த தோழர்களின் ஒவ்வொரு சம்பவமும் அவர்களின் வீரத்திற்கு பெரும் எடுத்துக்காட்டாகும். அதில் ஒன்று, பேரா மவூனாவில் பலர் நிராகரிப்பவர்களில் கையினால் ஷஹீதாகவும் செய்தனர். இன்னும் பலர் ஆபத்தான நிலைமைகளில் நிறைய பங்கு பெற்றவாறு ஈராக்கை வெற்றி கொள்ளவும் செய்தனர். இவர்களைப் பற்றி இவ்வாறு சந்தேகப்படுவது என்பது தமது உள்ளத்தில் தோன்றும் எண்ணத்தின்படி மிஸ்டர் மார்குலிஸ் எழுதியுள்ளாரே தவிர வேறு இல்லை. மார்குலிஸ் தமது நூலில் ஒரு வாதத்தை வைக்கிறார். இந்த நூல் எந்தப் பாரபட்சமும் இன்றி எழுதப்பட்டுள்ளது என்கிறார். இதுவே இம்மக்களின் நடைமுறையாகும். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் மீது ஆட்சேபனை செய்ய எந்தவொரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதனை கை நழுவவிடமாட்டார்கள்.

அசல் சம்பவத்தின் பக்கம் வருகிறேன். அது முஸ்லிம்களின் இந்த சிறு குழு நக்லா போய் சேர்ந்தது. தமது பணியில் மூழ்கி விட்டது. அதாவது தகவல்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டது. மக்கத்து நிராகரிப்பவர்களின் நோக்கம் விருப்பம் என்ன? முஸ்லிம்களின் மீது தாக்குதல் தொடுக்கும் ஏதாவது விருப்பம் ஏதும் இல்லையே என்று விரங்களைத் தேடுவதில் மூழ்கி விட்டார்கள். அவர்களில் சிலர் செய்திகளைச் சேகரிக்கும் எண்ணத்தில் தலையின் முடியை மழித்து விட்டார்கள். தம்மை உம்ராவுக்கு வந்தவர்கள் என்று மக்கள் கருதியவாறு தம்மீது எந்த சந்தேகமும் கொள்ளாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். இருந்தும் திடீரென்று அவர்கள் இருந்த இடத்தில் குரைஷிகளின் ஒரு கூட்டம் வந்து சேர்ந்தது. தாயிபிலிருந்து மக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்த இரு குழுவும் ஒன்றையொன்று சந்தித்தது. முஸ்லிம்கள் என்ன செய்வது என்று தமக்குள் ஆலோசனை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைமுகமாக தகவல் சேகரிக்க அனுப்பியிருந்தார்கள். வெளிப்படையில் தாக்குதல் தொடுக்க அனுப்பவில்லை.

மறுபுறம் குரைஷிகளிடமிருந்து போர் ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் எதிரும் புதிருமாக வந்து விட்டார்கள். இரு கூட்டமும் நேருக்கு நேர் வந்து விட்டது. மேலும் குரைஷிகளின் கூட்டம் முஸ்லிம்களைப் பார்த்து விட்டால் அவர்கள் மறைமுகமாக அனுப்பப்பட்டது பயனற்றுப் போகும். இன்னும் ஒரு பிரச்சனை என்னவெனில், சில முஸ்லிம்களின் எண்ணத்தின்படி அது ரஜப் மாதமாக இருந்தது. புனித மாதங்களின் இறுதிப் பகுதியாகும். அரபிகளின் பழைய வழக்கத்தின்படி அம்மாதத்தில் சண்டையிடக் கூடாது. சிலரது கருத்தின்படி ரஜப் முடிந்தது. ஷஅபான் தொடங்கி விட்டது.

சில அறிவிப்புகளின்படி இந்தக் குழு ஜமாத்துல் ஆகிர் மாதத்தில் அனுப்பப்பட்டது. இது ஜமாத்தி மாதமா ரஜப் மாதமா என்ற சந்தேகம் இருந்தது. இன்னொருபுறம் நக்லாவில் வசிப்பவர்கள் ஹரம் எல்லைக்குள் உட்பட்ட பகுதியில் இருந்தனர். இன்று ஒரு முடிவு எடுக்காவிட்டால் நாளை இந்தக் குழுவும் ஹரம் எல்லைக்குள் நுழைந்து விடும். அதன் கண்ணியம் பாதிக்கப்படும். இந்த எல்லா விஷயங்களையும் யோசித்தவாறு முஸ்லிம்களின் கூட்டம் இந்தக் குழுவை தாக்கி அல்லது கைது செய்து விட வேண்டும் அல்லது கொன்று விட வேண்டும் என்று முடிவு செய்தது. இவ்வாறு அவர்கள் தாக்குதல் தொடுத்தனர். விளைவு மறுப்பவர்களின் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் கைது செய்யப்பட்டனர். நான்காவது ஒருவர் தப்பி ஓடி விட்டார். முஸ்லிம்களினால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. இவ்வாறு அவர்களின் தீர்மானம் வெற்றி பெறாமல் நின்று விட்டது. பிறகு முஸ்லிம்கள் அக்குழுவினரின் பொருள்களைக் கைப்பற்றினார்கள். குரைஷிகளில் ஒருவர் தப்பிச் சென்றதால் நிச்சயமாக இங்கு நடந்த சண்டை மக்காவுக்கு தெரிய வரும். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் மற்றும் அவர்களுடன் இருப்பவர்கள் போர்ப் பொருள்களுடன் விரைவாக மதீனா நோக்கி திரும்பினார்கள்.

இந்த இடத்தில் மார்க்கோலிஸ் சாஹிப் எழுதுகிறார்: உள்ளபடி முஹம்மது (ஸல்) அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டே சிறப்பான மாதங்களில் இந்தக் குழுவை அனுப்பினார்கள். குரைஷிகள் இயல்பாகவே இம்மாதத்தில் கவனமற்றிருப்பார்கள். முஸ்லிம்களுக்கு அவர்களின் சாமான்களைக் கொள்ளையடிக்க நிச்சயமாக வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்கள். ஆனால் அறிவுள்ள மனிதன் புரிய முடியும். இத்தகைய சின்னஞ்சிறு குழுவை தூரமான பகுதிக்கு கொள்ளையடிக்க எவ்வாறு அனுப்ப முடியும்? அதுவும் எதிரிகளின் தலைமையகம் அருகில் இருக்கும் இடத்திற்கு அனுப்ப முடியும்?

எனவே இந்த விஷயம் வரலாற்றில் தெளிவாக நிரூபணமாகி உள்ளது. இந்தக் குழு நிச்சயமாக செய்தி சேகரிக்கவே சென்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அக்குழுவின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது பற்றி மிகவும் கோபம் கொண்டார்கள். அக்குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று சேர்ந்ததும் நிலைமைகளைப் பற்றி எடுத்துக் கூறியது. அன்னார் உடனே மிகவும் கோபம் கொண்டார்கள். நாங்கள் உங்களுக்கு புனித மாதத்தில் சண்டையிட அனுமதிக்கவில்லையே? என்று கூறியபடி போர்ப்பொருட்களை ஏற்கவும் மறுத்து விட்டார்கள். இதனால் அப்துல்லாஹ் மற்றும் அவருடன் இருந்தவர்கள் வெட்கமடைந்தனர். நாம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கோபத்தினால் அழிந்து விட்டோம் என்று நினைத்தனர்.

மறுபுறம் முஸ்லிம்கள் சிறப்புள்ள மாதத்தின் புனிதத்தை தகர்த்து விட்டார்கள் என்று குரைஷிகள் கூச்சலிட்டனர். கொல்லப்பட்ட அம்மனிதர் அம்ர் பின் அல் ஹழ்ரமி ஒரு தலைவர் ஆவார். உத்பா பின் ரபிய்யா மக்காவின் தலைவருக்கு நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவரும் ஆவார். எனவே இதுவும் குரைஷிகளின் கோபத்தின் நெருப்பை இன்னும் தூண்டி விட்டது. அவர்கள் மேலும் கோபத்துடன் மதீனா மீது தாக்குதல் தொடுக்க ஆயத்தம் செய்யத் தொடங்கினர். சுருக்கமாக, இதனால் முஸ்லிம்கள் மற்றும் காஃபிர்கள் இருபுறமும் நிறைய முரண்பட்ட கருத்துக்கள் ஏற்பட்டன. இறுதியில் திருக்குர்ஆனில் வஹி இறங்கியது. அதனால் முஸ்லிம்களுக்கு ஒரு நிம்மதியும் ஏற்பட்டது.

மக்கள் உங்களிடம் சிறப்புள்ள மாதங்களில் சண்டையிடுவது பற்றி கேட்கிறார்கள். நீர் கூறுவீராக: சிறப்புள்ள மாதங்களில் சண்டையிடுவது மிகவும் தீயதே. ஆனால் சிறப்புள்ள மாதங்களில் மக்களை இறைவனது மார்க்கத்தை விட்டு தடுப்பதும் இன்னும் சொல்வதாயின், சிறப்புள்ள மாதம் மற்றும் சிறப்புள்ள பள்ளி இரண்டையும் மறுப்பது அவற்றின் மகத்துவத்தை முறிப்பது ஹரம் எல்லைக்குள் இருக்கும் மக்களை பலவந்தமாக வெளியேற்றுவது, இணை வைக்கக் கூடியவர்களே உங்களது அதுபோன்ற செயல்கள் இறைவனது பார்வையில் சிறப்புள்ள மாதத்தில் சண்டையிடுவதை விட கெட்ட செயல் ஆகும். நிச்சயமாக சிறப்புள்ள மாதத்தில் நாட்டுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவது குழப்பத்தை நிறுத்துவதற்காக செய்யப்படும் கொலையை விட மோசமானது. (2:218)

முஸ்லிம்களே! இதுவே மறுப்பவர்களின் நிலையாகும். அவர்கள் உங்களைப் பகைப்பதில் இவ்வளவு குருடாக ஆகி விடுகிறார்கள். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அவர்கள் தமது நிலையிலிருந்து திரும்ப மாட்டார்கள். தமது சண்டையை தொடரவே செய்வர். எந்த அளவுக்கு என்றால் உங்கள் மார்க்கத்திலிருந்து உங்களை திருப்பும் வரை அதனை செய்வர். நிபந்தனை என்னவெனில் அவர்களுக்கு சக்தி இருக்க வேண்டும். இந்த வகையில் வரலாற்றிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்திற்கு எதிராக குரைஷித் தலைவர்கள் தமது இரத்தப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்தார்கள். கண்ணியமிக்க விஷயத்திலும் அதனைத் தொடரவே செய்தார்கள்.

இன்னும் சொல்வதாயின், சிறப்புள்ள மாதங்களிலிருந்து பயன் பெற்றவாறு தமது குழப்பம் ஏற்படுத்தும் செயல்கள் இன்னும் அதிகமாகவே செய்தனர். பிறகு தமது உள்ளத்திற்கு பொய்யான ஆறுதல் தருவதற்காக அந்த சிறப்புள்ள மாதங்களை முன்னே பின்னே மாற்றி அமைத்துக் கொண்டனர். இதனை நஸீ என்ற பெயரால் அழைத்தனர். பிறகு மேற்கொண்டு காஃபிர்கள் கோபம் கொண்டனர். அதனால் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது உறுதியான எண்ணம் இருந்தும் மக்கத்துக் காஃபிர்களும் உடன் இருந்தவர்களும் முஸ்லிம்களின் நட்புக் கோத்திரத்திற்கு எதிராக ஆயுதம் எடுத்தனர். முஸ்லிம்கள் அவர்களுக்கு ஆதரவாக வெளியில் வந்தனர். அவர்களுக்கு எதிராகவும் ஹரம் எல்லைக்குள்ளேயே ஆயுதத்தைப் பயன்படுத்தினர்.

திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் கூறியதிலிருந்து முஸ்லிம்கள் ஆறுதல் அடைய வேண்டியதிருந்தது. அதே வேளையில் குரைஷிகளும் கூட சிறிது தளர்ந்து விட்டனர். அவர்களின் மக்கள் தமது ஏமாற்றத்தை விடுவதற்காக மதீனாவுக்கு வந்தார்கள். அதே வேளையில் சஅத் பின் அபீ வக்காஸ், உத்பா பின் கஸ்வான் இருவரும் திரும்பி வந்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இருவரும் குரைஷிகளிடம் மாட்டிக் கொண்டார்களோ என்ற சந்தேகம் கொண்டார்கள். அவ்வாறு மாட்டினால் குரைஷிகள் அவர்களை உயிருடன் விடமாட்டார்கள்.

எனவே அவ்விருவரும் வரும் வரை இந்த கைதிகளை விட முடியாது என்று கூறிவிட்டார்கள். எமது மக்கள் நலமாக மதீனா வந்து சேர்ந்ததும் நான் உங்கள் மக்களை விடுகிறேன் என்று கூறிவிட்டார்கள். இந்த இருவரும் பிறகு திரும்பி வந்துவிட்டார்கள். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈட்டுத்தொகை வாங்கிக்கொண்டு தம்மிடமிருந்த இரு கைதிகளையும் விட்டார்கள். ஆனால் அந்த இரு கைதிகளில் ஒருவர் மீது மதீனாவில் தங்கியிருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கம் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் தாக்கம் எந்த அளவுக்கு ஏற்பட்டது எனில் அவர் விடுதலை விட்டும் திரும்பிச் செல்ல மறுத்து விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கையில் பைஅத் செய்தவாறு இஸ்லாத்தை ஏற்றார். பேராமவூனாவில் அவர் ஷஹீதும் ஆகிவிட்டார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 334–330)

அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதும் அதற்காக தியாகம் செய்ததும் இந்த மார்குலிஸ் போன்ற ஆட்சேபனையாளர்களுக்கு பதில் சொல்ல போதுமானதாகும். ஆனால் இவர்கள் இதுபோன்ற விஷயங்களை அலட்சியமாக விட்டு விடுகின்றனர்.

ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வானுக்கு பத்ர் போர் மற்றும் அதன் பின் நடந்த எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 439 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் உடைய இரு சுதந்திரம் விடப்பட்ட அடிமை கப்பா, சஅத் இருவரும் கூட பத்ர் போரில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றார்கள்.

(அல்இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 439 குப்பாப் மவ்லா உத்பா பின் கஸ்வான் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய நிபுணத்துவம் பெற்ற அம்பு வீசுபவர்களில் ஒருவராவார்.

(தப்காத்துல் குபுரா தொகுதி 3 பக்கம் 72 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உத்பாவை பஸ்ராவின் தலைநகருக்கு அனுப்பினார்கள். அங்கிருந்த அபுலா மக்களுடன் சண்டையிடுவதற்காகவும் அனுப்பினார்கள். அனுப்பும்போது ஹஸ்ரத் உமர் கூறினார்கள். நீங்களும் உடன் இருப்பவர்களுக்கு அரபகம் முடிந்து அரபி அல்லாதவர்கள் வாழும் எல்லை வரை செல்லுங்கள். அல்லாஹ்வின் வளம் மற்றும் நன்மையைப் பெற்றவர்களாக செல்லுங்கள். உங்களால் முடிந்தவரை அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் கடும் எதிரிகளிடம் செல்கிறீர்கள். மேலும் கூறினார்கள். நான் நம்புகிறேன். அவர்களுக்கு எதிராக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான். நான் அலா பின் ஹழ்ரிக்கு எழுதியுள்ளேன். அல் பஜா பின் ஹாசமா மூலமாக உங்களுக்கு உதவி செய்வான். அவர் எதிரிகளுடன் சண்டையிடுவதில் மிகவும் அனுபவம் மிக்கவரும் அரபிகளின் திறமைகளை பெற்றவரும் ஆவார்.

பிறகு ஹஸ்ரத் உமர் கூறினார்கள்: நீங்கள் அவரிடம் ஆலோசனை வாங்க வேண்டும். எவர் உங்கள் கருத்துக்களை ஏற்கிறார்களோ அவர்களின் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். எவர் மறுக்கிறாரோ அவருக்கு ஜிஸ்யா நிர்ணயிக்க வேண்டும். அதனை அவர் தனது கையால் வழங்க வேண்டும். அதற்கு அவர் ஏற்கா விட்டால் ஆயுதத்தை பயன்படுத்த வேண்டும். ஜிஸ்யாவும் தராமல், தமது மார்க்கத்திலேயே இருக்கவும் விரும்புகிறார் எனில் இஸ்லாத்தையும் ஏற்க விரும்பவில்லை எனில் சண்டைக்குத் தயாராக இருக்கிறார் எனில் அவருடன் சண்டையிடுங்கள். அரபுகளில் எவரிடம் சென்றாலும் ஜிஹாதுக்கு அவர்களைத் தூண்ட வேண்டும். எதிரிகளிடம் தைரியமாக எதிர்நிற்க வேண்டும். அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டும். அவன் உங்கள் ரப் ஆவான்.

ஹஸ்ரத் உமர் ஹஸ்ரத் உத்பாவை 800 பேருடன் பஸ்ராவுக்கு அனுப்பினார்கள். பிறகு சிறிது படையை அனுப்பினார்கள். ஹஸ்ரத் உத்பா உபுலா என்ற இடத்தை வென்றார்கள். பஸ்ரா நகரை அங்கு உருவாக்கினார்கள். இவர் பஸ்ராவை ஒரு நகரமாக்கிய முதல் மனிதர் ஆவார்கள். அதனை குடியிருப்பு ஆக்கினார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வானை பஸ்ராவுக்கு கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அவர் கரிபா என்ற இடத்தில் தங்கினார்கள். கரீபா பாரிஸ் உடைய பழைய நகரமாகும். இதனை ஃபார்ஸியில் வாஸ்தா பாஸ்உந்தே சேர் என்று அழைத்தனர். அரபிகள் அதனை கரீபா என்று அழைத்தனர். அதன் அருகில் தான் ஒட்டகப் போர் நடந்தது. ஹஸ்ரத் உத்பா உமர் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். முஸ்லிம்களுக்கு குளிர்காலம் கழிக்கக்கூடியதும் மற்றும் யுத்தத்திலிருந்து திரும்பும்போது தங்கக்கூடியதுமான ஓர் இடம் இல்லை. அத்தகைய இடம் தேவை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுதினார்கள்: தண்ணீரும் விலங்குகளுக்கு மேய்ச்சலுக்கு உரிய இடங்களும் உள்ள ஓரிடத்தைத் தேடுங்கள். உடனேயே ஹஸ்ரத் உத்பா பஸ்ராவில் அதனை உருவாக்கினார்கள். முஸ்லிம்கள் அங்கு அதனை உருவாக்கினார்கள். முஸ்லிம்கள் அங்கு பான்ஸ் மரக்கட்டைகளால் ஓரிடத்தை ஏற்படுத்தினார்கள். உத்பா அங்கு மஸ்ஜிது கட்டினார். ஹஸ்ரத் உத்பா பள்ளிக்கு அருகில் திறந்த வெளியில் அமீரின் வீட்டை அமைத்தார்கள். மக்கள் போருக்குச் செல்லும்போது அங்குள்ள வீடுகளில் தங்குவர். திரும்பி வரும்போது அவ்விடத்தில் மீண்டும் வீடு அமைத்து அமர்வார்கள். பிற்காலத்தில் மக்கள் உறுதியான வீடுகள் அமைக்கத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் உத்பா மஹ்ஜன் பின் அதுராவுக்கு கட்டளையிட்டார்கள். அவர் பஸ்ராவின் ஜாமிஆ மஸ்ஜிதின் அடிக்கல் நாட்டினார். அங்கு பான்ஸ் மரக்கட்டைகளால் பள்ளியை உருவாக்கினார்.

பிறகு உத்பா ஹஜ் செய்வதற்காக வெளியேறினார். முஜாஸி பின் வஸ்வதுவை தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். அவரை பராஅத்துக்கு செல்லுமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் முகிரா பின் சுவுபாக்கு தொழுகையை நடத்துமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் உத்பா, உமர் (ரலி) அவர்களிடம் சென்று பதவியை ராஜினாமா செய்ய விரும்பினார். இந்தப் பணி எனக்கு மிகவும் சிரமமாக உள்ளது. வேறு ஒருவரை அங்கு அமீராக நியமியுங்கள் என்றார். ஹஸ்ரத் உமர் அவரது ராஜினாமாவை ஏற்கவில்லை. உடனே உத்பா அல்லாஹ்வே! என்னை அந்த ஊருக்கு திரும்ப அனுப்பாதே என்று துஆ செய்தார்கள். அவர் பிறகு தமது வாகனத்திலிருந்து கீழே விழுந்தார். ஹிஜ்ரி 17 –ல் இறந்து விட்டார். ஹஸ்ரத் உத்பா மக்காவிலிருந்து பஸ்ரா செல்லும் வழியில் இது நடந்தது. அவர் சென்று சேர்ந்த இடத்தை மக்கள் மார்தின்பனி அலைம் என்று அழைத்தனர். இன்னொரு கூற்றின்படி இவர் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு ரப்லா என்ற இடத்தில் வஃபாத் ஆனார்.

இவரது வஃபாத் பற்றி பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. மூன்றாவது ஒரு கூற்றின்படி ஹிஜ்ரி 17 –ல் 57 வயதை அடைந்து பஸ்ராவில் ஹஸ்ரத் உத்பா வஃபாத் ஆனார்கள். இவர்களுக்கு வயிற்றில் நோய் இருந்தது. சிலர் இவர் ஹிஜ்ரி 15–ல் இறந்ததாகவும் கூறுகின்றனர். இவர் மரணித்ததும் இவரது அடிமை சுவைத் உத்பாவுடைய சாமான்களையும் விட்டுச் சென்றவைகளையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார். ஹஸ்ரத் உத்பா 57 வயதைப் பெற்றிருந்தார். நெடிய உடல்; நல்ல அழகு;

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 559,560 உத்பா பின் கஸ்வான் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 73 உத்பா பின் கஸ்வான் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

காலித் பின் உமைர் அத்வீ கூறுகிறார். ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் எங்களிடம் சொற்பொழிவாற்றினார். அல்லாஹ்வை புகழ்ந்தார். பிறகு கூறினார். அம்மா பஅத் உலகம் தான் முடியப் போவதை அறிவித்து விட்டது. வேகமாக திரும்பிச் சென்று கொண்டிருக்கிறது. அதாவது உலகம் கியாமத்தை நோக்கிச் செல்கிறது. அதில் எதுவும் எஞ்சியிருக்காது. ஒரு பாத்திரத்தில் குடிப்பவர் மிச்சமாக விட்டு வைக்கிற சிறு பானம் அளவுக்குதான் எஞ்சியிருக்கிறது. நீங்கள் இதிலிருந்து முடிவுறாத ஒரு வீட்டிற்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்த உலகம் தற்காலிகமானது. இதிலிருந்து அதற்கு மாறிக் கொள்ளுங்கள். ஏனெனில் நம்மிடம் கூறப்பட்டுள்ளது. ஒரு கல் நரகத்தில் வீசப்பட்டால் அது 70 வருடங்கள் விழுந்து கொண்டே இருக்கும்போது கூட அதன் ஆழம் முடிவடையாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்த நரகம் நிரப்பப்படும். பாவிகள் அதில் எறியப்படுவர். எனவே இந்த வாழ்விலிருந்து பயன் அடையுங்கள். நன்மையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதுவே அன்னார் கூறியதன் நோக்கமாக இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? சொர்க்கத்தின் ஒரு தாழ்ப்பாளில் இருந்து மற்றொன்று வரை நாற்பது வருட தூரமாகும். நிச்சயமாக அதற்கு ஒரு காலம் வரும். அது மக்களால் நிரம்பும். நான் என்னைப் பார்க்கிறேன். நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தவர்களுள் ஒருவன் ஆவேன். அந்நாட்களில் மர இலைகளைத் தவிர வேறு உணவு இருக்கவில்லை. எங்களிடம் அத்தகைய காலம் வந்தது. எமது நிலை மிக மோசமாக இருந்தது. மர இலைகளை உண்டு வந்தோம். எங்களது ஈறுகள் காயமடைந்து விட்டன. என்னிடம் ஒரு போர்வை இருந்தது.

அவர் தமது வாழ்வைப் பற்றி கூறுகிறார்: அந்தப் போர்வையைக் கிழித்து இரு துண்டுகளாக்கி ஒன்றை சஅத் பின் மாலிகிற்கு கொடுத்தேன். இதுவே எமது நிலையாக இருந்தது. மூடுவதற்குப் போர்வை கூட இருக்கவில்லை. பாதி ஆடையை நானும் மீதி பாதியை சஅதும் ஆக்கிக் கொண்டோம். ஆனால் இன்று விடிந்தால் ஒருவர் நாட்டின் கவர்னராக இருக்கிறார். நான் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருகிறேன். நான் என்னை பெரியவனாகக் கருதினாலும் அல்லாஹ்வின் பார்வையில் மிகச் சிறியவனாக இருக்கிறேன்.

அன்னாரது எளிமை பற்றி அவர்கள் கூறுகிறார்கள்: எனவே நான் என்னை சிறியவனாகவே கருதுகிறேன். இப்போது நிலைமை மாறி விட்டது. வளம் வந்து விட்டது. நீங்கள் அதிகமாகக் கவலைப்பட வேண்டும். எந்த நுபுவ்வத்தும் கடந்த காலத்தில் அதன் தாக்கம் இல்லாமல் போனதில்லை. அதன் முடிவு சிறந்ததாக ஆகாமல் இருந்ததில்லை. நீங்கள் உண்மை நிலையை அறிந்து கொண்டால் நல்லது.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல்ஸ் ஸஹது)

முஸ்லிம்களிடமும் உலகாதாயம் உருவாகும். அப்போது நான் கூறுவதைச் சரி என்று உணர்வீர்கள். நீங்கள் எப்போதும் இறைவன்

பக்கம் கவனம் செலுத்துங்கள். ஆன்மீகத்தின் மீது கவனம் செலுத்துங்கள். இதன் மூலமே சொர்க்கத்தினருக்கான ஏற்பாடுகள் உருவாக முடியும்.

அடுத்த சஹாபி சஅத் பின் உபாதா. சஅத் பின் உபாதா கஸ்ரஜ் கிளையாகிய பனூ சாயிதாவைச் சார்ந்தவர். இவரது தந்தை உபாதா பின் அலைம். தாயார் அம்ரா ஆவார். இவர் மஸ்ஊது பின் கைஸ் உடைய மூன்றாவது மகளாக இருந்தார். இவரது தாயாருக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நற்பேறு கிடைத்திருந்தது. சஅத் பின் உபாதா சஅத் பின் சைத் அஷ்அலி உடைய சின்னம்மா மகன் ஆகிய சகோதரன் ஆவார். இவர் பத்ர் சஹாபிகளில் ஒருவர். சஅத் இரு திருமணம் முடித்திருந்தார். கஸியா பின்த் சஅத் மூலமாக சயீது, முஹம்மது கைஸ் மற்றும் அப்துர் ரஹ்மான் பிறந்தனர். இரண்டாவது புகையா பின்த் உபைத் மூலமாக கைஸ் உமாமா, சஅத் பிறந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 460,461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மன்துஷ் பின்த் உபாதா சஅத் பின் உபாதா அவர்களின் சகோதரி ஆவார். இவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் சஅத் பின் உபாதாவுக்கு இன்னும் ஒரு சகோதரி லைலா பின்த் உபாதா ஆவார். இவரும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்து இஸ்லாத்தை ஏற்றிருந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 277 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா சுட்டுப்பெயர் அபூ சாயித் ஆகும். சிலர் இவரது சுட்டுப்பெயர் அபூ கைஸ் என்றும் கூறுகிறார்கள். முதல் கூற்று சரியானதாக தெரிகிறது. அதாவது அபூ சாயித்.

சஅத் பின் உபாதா அன்ஸாரிகளின் கஸ்ரஜ் கோத்திரத்திற்கு செய்தி தரும் கோத்திரமாக இருந்தனர். சஅத் பின் உபாதா தலைவராகவும் கொடையாளியாகவும் இருந்தார். எல்லாப் போர்களிலும் அன்ஸாரிகளின் கொடி இவர் கையில்தான் இருந்திருக்கிறது. சஅத் பின் உபாதா அன்ஸாரிகளின் நல்ல தோற்றமுள்ளவர். இவரது தலைமையை மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 441 சஅத் பின் உபாதா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஅத் பின் உபாதா அறியாமைக் காலத்திலேயே அரபி எழுதப் படிக்க அறிந்திருந்தார். அக்காலத்தில் எழுதத் தெரிந்தவர்கள் மிகக் குறைவாகவே இருந்தார். அம்பு எய்வதிலும் நீந்துவதிலும் திறமைசாலியாக இருந்தார். இவற்றை நன்றாகத் தெரிந்தவரை காமில் (முழுமையானவர்) என்று அழைத்தனர். அறியாமைக் காலத்தில் சஅத் பின் உபாதா மற்றும் அவருக்கு முன் வாழ்ந்த மூதாதையர்கள் தமது வீடுகளில் இவ்வாறு அறிவிப்பவர்களாக இருந்தனர். எவருக்கு மாமிசமும் கொழுப்பும் பிடிக்குமோ அவர்கள் துலைம் பின் ஹாரிஸாவின் வீட்டிற்கு வாருங்கள். ஹிஸாம் பின் உர்வா தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். நான் சஅத் பின் உர்வாவை பார்த்துள்ளேன். அவர் தமது பெரிய வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுவார். எவர் கொழுப்பும் மாமிசமும் விரும்புவாரோ சஅத் பின் உபாதாவிடம் வாருங்கள் என்றழைப்பர். அவர் விலங்குகளை அறுத்து விருந்தளிப்பார். அவரது மகனையும் அதே நிலையில் பார்த்துள்ளேன். அவரும் இவ்வாறே விருந்துக்கு அழைப்பார். நான் மதீனாவின் வீதிகளில் செல்லும்போது அப்போது நான் வாலிபனாக இருந்தேன். அப்துல்லாஹ் பின் உமர் உடன் வந்தார். ஹிஸாம் பின் உர்வா தமது தந்தையிடம் இருந்து அறிவிக்கிறார். அப்போது நான் வாலிபனாக இருந்தேன்.

அப்துல்லாஹ் பின் உமர் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்: அப்போது நான் வாலிபனாக இருந்தேன். அப்துல்லாஹ் பின் உமர் என்னுடன் வந்தார். மதீனாவிலிருந்து நஜ்து செல்லும் பாதையில் 4 – லிருந்து 8 மைல் தூரத்தில் ஒரு பள்ளத்தாக்கு உள்ளது. அங்குள்ள தமது நிலத்திற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் ஒருவர் வாலிபனே இங்கு வா என்றார். அப்துல்லாஹ் பின் உமர் தான் இவரை அழைத்தார். வாலிபனே இங்கு வா. சஅத் பின் உபாதாவின் பெரிய வீட்டிலிருந்து குரல் வருவதைக் கேட்டாயா? நான் கூறினேன். பார்த்தேன்; இப்போது அக்குரல் கேட்கவில்லை. அவர் கூறினார்: நீர் உண்மை சொன்னீர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 460,461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது சஅத் பின் உபாதாவுக்கு இருந்த அந்த விரிந்த கை மற்றும் அவர் விருந்தளித்தது போன்று பிறகு நடக்கவில்லை. எனவே அப்துல்லாஹ் பின் உமர் இவ்வாறு கேட்டார்.

ஹஸ்ரத் நாபிஃ கூறுகிறார்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் சஅத் பின் உபாதாவின் பெரிய வீட்டை கடந்து செல்லும்போது என்னிடம் கூறினார். நாபிஃ, இது அவர்களது மூதாதையர்களின் வீடு. வருடத்தில் இவ்வாறு அழைப்பவர் அழைத்துக் கொண்டே இருப்பார். கொழுப்பும் மாமிசமும் சாப்பிட விரும்புபவர்கள் துலைம் வீட்டிற்கு வாருங்கள் என்றார். அவர் மரணித்தார். பிறகு உபாதா அவ்வாறு செய்தார். பிறகு உபாதா மரணித்தார். பிறகு சஅத் அவ்வாறு அறிவிப்பு செய்தார். பிறகு ஸைத் பின் கைஸ் அவ்வாறு அவ்வாறு அழைப்பு விடுக்கக் கேட்டேன். கைஸ் எல்லாரினும் அதிகமாக கொடை வழங்குபவராக இருந்தார்.

(அல்இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 595 சஅத் பிஉ உபாதா – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது. அவர்களது பிள்ளைகள் தொடுத்த வழக்கும் பின்னர் இருக்கவில்லை. ஹஸ்ரத் சஅத் பின் உக்பா இரண்டாவது பைத்தே உக்பாவின்போது இஸ்லாத்தை ஏற்றார்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 375 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீனில் அவர்களது நிலை இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நுபுவ்வத்திற்கு 13 ஆண்டுகள் கழித்து துல்ஹஜ் மாதம் ஹஜ்ஜின்போது அவ்ஸ் கஸ்ரஜ் கோத்திரத்தின் பலர் மக்காவுக்கு வந்திருந்தார்கள். அதில் 70 பேர் முஸ்லிமானார்கள். அல்லது ஆக விரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திக்க மக்கா வந்தனர். முஸ்அப் பின் உமைர் அவர்களும் அதில் இருந்தார். முஸ்அப் உடைய தாயார் உயிருடன் இருந்தார். அவர் இணை வைப்பவர்களாக இருந்தார். முஸ்அப் மீது பெரும் அன்பு வைத்திருந்தாள். முஸ்அப் வந்திருக்கும் செய்தி கிடைத்ததும் அவருக்குச் சொல்லி அனுப்பினார். முதலில் என்னை வந்து சந்தித்த பிறகு வேறு எங்கும் செல் என்றார். முஸ்அப், முதலில் நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்தித்துவிட்டு அப்புறமாக தாயாரை வந்து சந்திப்பதாகச் சொல்லி அனுப்பினார். பிறகு அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். அன்னாரைச் சந்தித்துக் கூற வேண்டிய முக்கிய விஷயங்களைக் கூறிய பிறகு தமது தாயிடம் சென்றார். தன்னை முதலில் வந்து சந்திக்கவில்லை என்று கொதித்துப்போய் இருந்தார். பார்த்தும் மிகவும் அழுத்தார்; புகார் செய்தார்.

ஹஸ்ரத் முஸ்அப் கூறினார்: அம்மா, நான் உமக்கு சிறந்த ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். உங்களுக்கு மிகவும் பயன்தரத்தக்க விஷயமாகும். அதனால் எல்லா சண்டைகளும் முடிவுக்கு வந்து விடும். அது என்ன என்று தாயார் கேட்டதும் முஸ்அப் அமைதியாகக் கூறினார். நீங்கள் சிலை வணக்கத்தை விட்டு விட்டு முஸ்லிம் ஆகி விடுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளுங்கள். அப்பெண்ணோ கடும் இணை வைப்பவள். கேட்டதும் கூச்சலிட்டாள். நட்சத்திரத்தின் மீது ஆணை! உனது மார்க்கத்தில் நான் நுழைய மாட்டேன் என்றவாறு தமது உறவினர்களைப் பார்த்து முஸ்அப்பைப் பிடித்து கைது செய்யுமாறு சைக்கினை செய்தார். முஸ்அப் மிகவும் எச்சரிக்கையுடன் தப்பித்து வெளியில் வந்து விட்டார்.

இரண்டாவது பைஅத்தே உக்பா பற்றி எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முஸ்அப் மூலமாக அன்ஸாரிகளின் வருகை பற்றி செய்தி கிடைத்ததும் அன்னாருடன் அவர்களுள் சிலர் தனிப்பட்ட முறையில் சந்தித்திருந்தாலும் இவ்விடத்தில் ஒட்டுமொத்தமாக தனித்த ஒரு சந்திப்புக்காக ஹஜ் சந்தர்ப்பத்தில் ஹஜ் மாதத்தில் நடுப்பகுதியில் ஒரு தேதியில் நள்ளிரவில் எல்லாரும் ஒன்று கூடினர். கடந்த வருடம் வந்து சந்தித்த அதே பகுதியில் ஒன்று கூடினர். அமைதியாக மன நிறைவுடன் சந்திப்பதற்காக இவ்வாறு செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளுக்கு கூறி அனுப்பினார்கள். ஒன்றாக வராதீர்கள். தனித்தனியாக வாருங்கள்.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 23-30 January 2020 Issue No. 4-5

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஒருவர் இருவராக குறிப்பிட்ட நேரத்தில் மலை அடிவாரத்திற்கு வாருங்கள். தூங்குபவர்களை எழுப்ப வேண்டாம். இல்லாதவர்களை எதிர்பார்க்கவும் வேண்டாம். எவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் மட்டும் வாருங்கள் என்றார்கள். குறிப்பிட்ட நாள் வந்ததும் நள்ளிரவு ஆனதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனியே வீட்டில் இருந்து புறப்பட்டு வழியில் தனது சச்சா அப்பாஸை உடன் அழைத்துக் கொண்டார்கள். அப்போது அவர் இணை வைப்பவராக இருந்தார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்திருந்தார். ஹாசிம் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். இருவரும் சேர்ந்து அந்த மலை அடிவாரத்திற்கு வந்தனர். அதிக நேரம் ஆகவில்லை. அன்ஸாரிகளும் ஓரிருவராக வந்து சேர்ந்தார்கள். அவர்கள் 70 பேர் இருந்தார்கள். இவர்கள் அவ்ஸ் கஸ்ரஜ் இரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சச்சா அப்பாஸ் பேசத் தொடங்கினார்.

கஸ்ரஜ் கோத்திரத்தவர்களே! முஹம்மது (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தில் மிகவும் கண்ணியத்திற்குரியவரும், நேசிக்கப்படுபவரும் ஆவார். அவரது குடும்பம் அவரை பாதுகாக்கும் பணியைச் செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வோர் ஆபத்திலும் நெஞ்சை நிமிர்த்தி நின்று உள்ளது. இப்போது முஹம்மது (ஸல்) அவர்களுடைய விருப்பம் தமது நாட்டை விட்டு விட்டு உங்களிடம் வர வேண்டும் என்பதாக இருக்கிறது. நீங்கள் இவரை உங்களிடம் வைத்துக் கொள்ள விருப்பம் கொண்டிருக்கிறீர்களா? அவ்வாறு எனில் எல்லா வகையிலும் பாதுகாக்க வேண்டும். எல்லா எதிரிகளிடமும் நெஞ்சை நிமிர்த்தி எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதற்காக நீங்கள் தயார் எனில் நல்லது. இல்லையெனில் இப்போதே கூறிவிடுங்கள். ஏனெனில் தெளிவாக கூறிவிடுவது நல்லது.

அல்பரா பின் மஅரூர் என்பவர் அன்ஸாரிகளில் கண்ணியத்திற்குரிய வயது முதிர்ந்த மனிதராவார். அவர் கூறினார்: அப்பாஸ் உமது பேச்சைக் கேட்டு விட்டோம். நாங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே தமது வாயால் கூற வேண்டும் என்று நினைக்கிறோம். எங்கள் மீது என்ன பொறுப்பை இட விரும்புகிறார்களோ அவர்கள் கூறட்டும். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனில் சில வசனங்களை ஓதினார்கள். பிறகு ஒரு சிறிய உரை நிகழ்த்தினார்கள். அதில் இஸ்லாத்தின் போதனையைக் கூறினார்கள். அல்லாஹ்வுக்குரிய உரிமை அடியாருக்குரிய உரிமை பற்றி எடுத்துக் கூறினார்கள். நான் உங்களிடம் எதிர்பார்ப்பது நீங்கள் உங்கள் நெருங்கிய உறவினர்களைப் பாதுகாப்பது போன்று தேவை ஏற்படும்போது என்னுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதுவேயாகும்.

அன்னார் சொற்பொழிவை முடித்ததும் அல்பரா பின் மர்ரூர் அரபிகளின் வழக்கத்தின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையை தன் கையில் ஏந்தியவாறு அல்லாஹ்வின் தூதரே! உங்களை உண்மையுடன் அனுப்பிய இறைவன் மீது ஆணையாக! நாங்கள் எங்கள் உயிரைப் போன்று உங்களைப் பாதுகாப்போம். நாங்கள் வாள்களின் நிழலின் வளர்ந்தவர்கள். இவ்வாறு பேசி முடிக்கும் முன் அபுல் ஹிஸம் பின் தய்யிஹான் அவரது பேச்சை இடையில் நிறுத்திக் கூறினார். அல்லாஹ்வின் தூதரே! யஸ்ரப் உடைய யூதர்களுடன் எங்களுக்கு நீண்ட காலத் தொடர்பு இருக்கிறது. உங்களுக்கு உதவி செய்வதால் அவர்கள் எங்களுடன் உறவைத் துண்டித்துக் கொள்வார்கள். அல்லாஹ் உங்களுக்கு வெற்றி தரும்போது எங்களை விட்டுவிட்டு உங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டால் நாங்கள் அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் ஆகிவிடக் கூடாதே என்றார்.

இதைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள்: இல்லை. இல்லை. அவ்வாறு நடக்காது. உங்கள் இரத்தம் எனது இரத்தமாகும். உங்கள் நண்பர் எனது நண்பராவார். உங்கள் எதிரிகள் எனது எதிரிகள் ஆவர்.

உடனே அப்பாஸ் பின் உபாதா அன்ஸாரி தமது மக்களைப் பார்த்து கூறினார்: மக்களே! இந்த வாக்குறுதிக்கு என்ன பொருள் என்று தெரியுமா? அதன் பொருள், ஒவ்வொரு கருப்பர் சிவப்பரையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். ஒவ்வொரு சமுதாய மக்களும் உங்களை எதிர்ப்பர். சந்திக்கத் தயாராக வேண்டும். ஒவ்வொரு தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். மக்கள் கூறினர்: ஆம். எங்களுக்குத் தெரியும். ஆனால் அல்லாஹ்வின் தூதரே! இதற்குப் பதிலாக எங்களுக்கு என்ன கிடைக்கும்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவனது சொர்க்கம் கிடைக்கும் இது எல்லா வெகுமதிகளிலும் பெரிய வெகுமதியாகும்.

அவர்கள் அனைவரும் கூறினர்: எங்களுக்கு இந்த வியாபாரம் சம்மதம் ஆகும். அல்லாஹ்வின் தூதரே! கையை நீட்டுங்கள். அன்னார் தமது அருளுக்குரிய கரத்தை நீட்டினார்கள். இன்னுயிர் வழங்கும் 70 பேர் ஒன்றாக அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். இதுவே இரண்டாவது பைஅத்தே உக்பா எனப்படுகிறது.

இந்த பைஅத் நடந்ததும் அன்னார் அவர்களிடம் கூறினார்கள்: மூஸா அவரது சகோதரர்களிடமிருந்து 12 கண்காணிப்பாளர்களை தேர்ந்தெடுத்தார். அவர்கள் பாதுகாவலராகவும் கண்காணிப்பாளராகவும் இருந்தனர். நானும் உங்களிடம் 12 கண்காணிப்பாளர்களை நியமிக்க விரும்புகிறேன். அவர்கள் உங்களின் கண்காணிப்பாளராகவும் பாதுகாவலராகவும் இருப்பர். அவர்கள் என்னிடம் ஈஸாவின் ஹவாரிகளைப் போன்று இருப்பர். அவர்கள் என்னிடம் தமது சமூகத்தார் பற்றி பதில் கூறத்தக்கவராக இருப்பர். எனவே பொருத்தமானவரை தேர்ந்தெடுத்து என்னிடம் கூறுங்கள். இவ்வாறு 12 பேர் பரிந்துரைக்கப்பட்டனர். அன்னார் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களை ஒவ்வொரு கோத்திரத்திற்கும் கண்காணிப்பாளராக்கி அவர்களின் கடமைகளைப் புரிய வைத்தார்கள். சில கோத்திரத்திற்கு இரு கண்காணிப்பாளர் நியமித்தார்கள்.

இந்த கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சச்சா அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் கவனமூட்டினார்கள். மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குரைஷிகளின் உளவாளிகள் எல்லா இடத்திலும் இருக்கிறார்கள். இந்த பேச்சு சம்பவம் தெரிய வந்தால் பிரச்சனையாகி விடும். இதனை அன்னார் கூறிக் கொண்டிருக்கும்போதே அந்த மலை அடிவாரத்தின் மேலிருந்து ஒரு ஷய்த்தானின் குரல் வந்தது. ஒரு மனிதர் இதனை உளவு பார்த்துக் கொண்டிருந்தார். குரைஷிகளே! உங்களுக்குத் தெரியுமா? இந்த (நவூதுபில்லாஹ்) முஹம்மம் மற்றும் அவருடன் இருப்பவர்கள் உங்களுக்கு எதிராக என்ன திட்டம் திட்டுகிறார்கள் தெரியுமா? இந்தக் குரல் எல்லாருக்கும் கேட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றிலும் அமைதியாக இருந்தார்கள். பிறகு கூறினார்கள்: எவ்வாறு வந்தீர்களோ அதேபோன்று ஒருவர் இருவராக உங்கள் தங்கும் இடத்திற்குச் செல்லுங்கள்.

அப்பாஸ் பின் நஸ்லஹ் அன்ஸாரி கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! எங்களுக்கு யார் மீதும் பயம் இல்லை. கட்டளையிட்டால் நாளை காலையிலேயே குரைஷிகள் மீது தாக்குதல் தொடுத்து இவர்களுக்கு இவர்களது அநீதியின் சுவையை அவர்களுக்கு காட்டித் தந்து விடுவோம்.

*(தொடர்ச்சி 7 வது கடைசிப் பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad